332

டத்திட்டம்

# தமிழ் இலக்கிய நயம்

தரம் 10

எம். அப்துல் றஸாக்
B.A (Hons), Dip.in.Edu, M.Phil(R)

IBH Publication

Class No: 894.811
Acc No 332

புதிய பாடத்திட்டத்திற்கமைவான

விருப்பத்திற்குரிய

# தமிழ் இலக்கிய நயம்

## தரம் 10

எம். அப்துல் றஸாக்
B.A (Hons), Dip.in. Edu, M.Phil(R)

IBH Publication

**நூல் விபரம்**

| | |
|---|---|
| நூல் | : தமிழ் இலக்கிய நயம் (விருப்பத்திற்குரிய பாடம்) |
| ஆசிரியர் | : எம்.அப்துல் றஸாக் |
| பக்கங்கள் | : 72 |
| தரம் | : 10 |
| பதிப்புரிமை | : ஆசிரியருக்கே |
| 1 ஆம் பதிப்பு | : 2017 ஏப்ரல் |
| பிரதிகள் | : 1000 |

வெளியீடு : IBH Publication
77, தெமடகொட வீதி, கொழும்பு 9,
தொ.பேசி : 011 5736098

விநியோகம் : இஸ்லாமிக் புக் ஹவுஸ்
77, தெமடகொட வீதி, கொழும்பு 9,
தொ.பேசி: 011 266 9197, 268 4851

வெளியீட்டகம் அல்லது ஆசிரியரின் எழுத்துமூல அனுமதியின்றி இப்புத்தகத்தின் எப்பகுதியையும் மறுபிரசுரம் செய்தலோ நிழற்பிரதி செய்தல் உட்பட இலத்திரனியல் அல்லது பொறியியல் சாதனத்தால் கையளித்தலோ தடைசெய்யப்பட்டுள்ளது.

# இலக்கிய நயமுடன் ...

"விருப்பத்திற்குரிய தமிழ் இலக்கிய நயம் - வினாவிடை" நூலினை உங்களுக்கு வழங்குவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழ் இலக்கிய நயம் மாணவர்களின் விருப்பத்திற்குரியதொரு பாடமாகும். மொழி அறிவுடன் மாணவர்களின் இலக்கிய ஆற்றலை மேம்படுத்தவும், ஆளுமையுள்ளதொரு சமூகத்தை கட்டியெழுப்பவும் இப்பாடம் துணைபுரிகின்றது. இரசனை வழிப்பட்ட நுண்ணுணர்வுகளை தூண்டி ஆராயும், தர்க்கிக்கும் ஆற்றலையும் இப்பாடம் மாணவர்களிடையே வளர்க்கிறது. இதனால் இப்பாடத்தின் அலகுகளை கற்கும் மாணவர்களுக்கு மேலதிகமாக வாசிப்பும் தேடலும் அவசியப்படுகின்றன. இதனைக் கருத்திற்கொண்டு பரீட்சை நோக்கிலான வினாவிடை அமைப்பில் இச்சிறுநூல் என்னால் ஆக்கப்பட்டிருக்கிறது.

வழமைபோலவே எனது நூல்களுக்கு மதிப்பும் ஆதரவும் நல்குகின்ற ஆசிரியர்களையும், மாணவர்களையும், இந்நூலாக்க முயற்சிக்கு உதவி நின்று ஊக்கம் தந்த அன்பு மனைவி, குழந்தைகளையும் நன்றியுடன் ஒருகணம் மனதில் இருத்துகிறேன்.

**எம்.அப்துல் றஸாக்,**
78/1, உடையார் வீதி,
அக்கரைப்பற்று - 02
0718218400

# உள்ளே...

| | | |
|---|---|---|
| 01. | புத்தகசாலை | 05 |
| 02. | பத்தி எழுத்துக்கள் | 09 |
| 03. | வாய்மொழிப் பாடல் | 17 |
| 04. | இனிது என... | 20 |
| 05. | தாய்ப்பசு | 25 |
| 06. | கிட்கிந்தைப் படலம் | 31 |
| 07. | விவேக சிந்தாமணி | 45 |
| 08. | உரிமையும் கடமையும் | 49 |
| 09. | எலியம் | 54 |
| 10. | நலம் புனைந்து உரைத்தல் | 63 |
| 11. | புதுமைப் பெண்ணாய் மாறிடுவோம் | 70 |

# 01. புத்தகசாலை

01. புத்தகசாலை என்ற கவிதையை எழுதியவர் யார்? இவர் எங்கு பிறந்தார்? இவரது காலம் யாது?

- *பாரதிதாசன்*
- *தென்னிந்தியாவின் பாண்டிச்சேரி, 1891- 1964*

02. பாரதிதாசனின் இயற்பெயர் என்ன? அவரின் புனைபெயருக்கான காரணம் யாது?

- *கனக சுப்புரத்தினம்*
- *பாரதியின் மீது கொண்ட ஈடுபாடு*

03. பாரதிதாசன் வகித்த பதவிகள் யாவை? இவர் எக்கொள்கை சார்ந்து இயங்கினார்?

- *ஆசிரியர், சட்டமன்ற உறுப்பினர்*
- *திராவிடக் கொள்கை*

04. பாரதிதாசனின் படைப்புக்கள் சிலவற்றைக் குறிப்பிடுக.

- *வீரத்தாய்*
- *அழகின் சிரிப்பு*
- *போர் மறவன்*
- *பாண்டியன் பரிசு*
- *இருண்ட வீடு*

05. புத்தகசாலை என்பது எதைக் குறிக்கிறது?

- *நூல் நிலையத்தை*

06. புத்தகசாலை கவிதையின் மையக் கருத்து என்ன?

- *நூலகத்தின் மீதான ஈர்ப்பும், அது ஏற்படுத்தும் தாக்கமும்*

07. புத்தகசாலையின் இடத்தை இன்று பெற்றிருப்பது எது?

- *இணையம்*

08. அச்சியந்திரத்தின் வருகையால் ஏற்பட்ட மாற்றம் யாது?

- செல்வந்தர்களிடமும் குறிப்பிட்ட சிலரிடமும் ஓலைச்சுவடிகளில் முடங்கியிருந்த கலை, இலக்கியம், அறிவியல் அனைத்தும் அச்சியந்திரத்தின் வருகையுடனேயே பதிப்பிக்கப்பட்டு நூல்களாக பல்கிப் பெருகின.

**09. புத்தக வாசிப்பில் மூழ்கியபோது கவிஞர் எவற்றைக் கண்டதாகக் குறிப்பிடுகிறார்?**

- இனித்த புவி இயற்கை அழகைக் காணுதல்
- இசைகேட்டல், மணம்மோருதல், சுவைகள் உண்ணல் (வாசிப்பினூடாக மேற்கண்ட அனுபவங்களைப் பெறல்)
- மனிதரிலே மிக உயர்ந்த கவிஞர்களின் ஒளி மிகுந்த உள்ளத்தோடு கவிஞரது உள்ளமும் கலத்தல்
- புத்துணர்வு பிறத்தல்

**10. புத்தகசாலை வேண்டும் நாட்டில் யாண்டும் என்று கவிஞர் கூறுவதற்கான காரணங்கள் எவையெனக் குறிப்பிடுக.**

- மனிதர்களெல்லாம் அன்பு நெறி காண்பதற்கு
- உயர்ந்த மனோபாவம் வானைப்போல விரிவடைவதற்கு
- தனிதமனித தத்துவமான இருளைப் போக்குதற்கு
- சக மக்கள் ஒன்றென்று உணர்வதற்கு
- இனிது இனிதாக எழுந்த உயர்ந்த எண்ணங்களெல்லாம் தோன்றுவதற்கு
- புனிதமுற்று மக்கள் புதுவாழ்வு வாழ்வதற்கு

**11. கவிஞர் காணவிழையும் நூலகம் எத்தன்மையானது என்பதை விளக்குக.**

- தமிழர்க்கு தமிழ்மொழியில் சுவடிச்சாலை (ஆவணக் காப்பகம்) பல்கலைக் கழகத்தைப் போல எங்கும் வேண்டும்.
- தமிழில் இல்லாத பிறமொழி நூல் அனைத்தும் நூலகத்தில தமிழாக்கித் தரப்பட்டு வாசிக்கக் கிடைக்க வேண்டும்.
- அமுதம் போன்ற செந்தமிழில் கவிதை நூலகளும், அழகிய முறையில அமைந்த உரைநடை நூலகளும் அதிகமாகச் சேகரிக்கப்பட்டு பல திறத்தினதாய் துறைதுறையாக பிரித்து அடுக்கி வைக்கப்படல வேண்டும்.
- நாலைந்து வீதிகளுக்கு ஒன்று வீதம் நல்ல வசதி படைத்த நூலகம் வேண்டும்.

- நூல்களெல்லாம் முறையாக அமைந்து நொடிக்கு நொடி ஆசிரியராய உதவுகின்ற அழகிய செய்தித்தாள்களும் குவிந்திருக்க வேண்டும்
- மூலையில் ஓர் சிறு நூலும் புது நூலாயின் அதை தலைமேற் சுமந்து வந்து தருதல் வேண்டும்.

**12. நூலகத்திற்கு வருவோர்க்கு எத்தகைய தொண்டு செய்ய வேண்டுமென கவிஞர் குறிப்பிடுகின்றார்?**

- வாசிக்க வருபவர்களின் வருகையை ஏற்க வேண்டும்
- மரியாதை காட்டி, அவர்களுக்கு இருக்கை தர வேண்டும்
- அவர்கள் விரும்பிய நூல்கள் தரவேண்டும்
- புதிய நூல்கள் வேண்டின் அதை பெற்றுத்தர வேண்டும்
- தினமும் நூல்களை நேசித்து வருபவர்கள் பெருகும் வண்ணம் எண்ணத்தாலும், செயலாலும், உடலாலும் குற்றமற்ற தொண்டு இழைக்க வேண்டும்.

**13. பின்வரும் அடிகளின் இலக்கியச் சிறப்பை விளக்குக.**

(1) **''மனிதரிலே மிக்குயர்ந்த கவிஞர் நெஞ்சின்**
**மகாசோதியில் கலந்த தெனது நெஞ்சம்''**

- மனிதர்களிலே உயர்ந்தவர் கவிஞர். அவர்தம் கவிதையை வாசிக்கும்போது வாசிப்பவரின் நெஞ்சும் அவ்வுயர்ந்த நிலையை அடையும். அத் தன்மையை பேரொளியில் (மகாசோதியில்) கலத்தல் என்று கூறுவது நயக்கத் தக்கது.

(2) **''அமுதம்போல் செந்தமிழிற் கவிதை நூற்கள்''**

- செந்தமிழில் வெளிவருகின்ற கவிதை நூற்களின் சிறப்பு ஓர் உவமையினூடாக கூறப்படுகின்றது. செந்தமிழ் கவிதை நூலகள் அமுதத்திற்கு ஒப்பிடப்படுகிறது.

(3) **''மனோபாவம் வானைப்போல் விரிவடைந்து**
**தனிமனித தத்துவமாம் இருளைப் போக்கி''**

- மனோபாவம் வானின் விரிந்த தன்மைக்கு ஒப்பிடப்பட்டு தனிமனித தத்துவம் இருளுக்கு உருவகிக்கப்பட்டுள்ளது. புத்தகம் வாசிக்கப்படும்போது மனோபாவம் வான்போல விரிவடைவதும், தனிமனித தத்துவம் இருளைப் போல அகல்வதும் சிறப்பாகும்.

(4) ''மாசற்ற தொண்டிழைப்பீர்! சமுதாயச் சீர்
மறுமலர்ச்சி கண்டதென முழக்கஞ் செய்வீர்''

- நூலகத் தொண்டின் சிறப்பு கூறப்படுகிறது. இது குற்றமற்ற தொண்டு என்றும், இதனால் சமுதாயம் மறுமலர்ச்சி காணு மெனவும் கூறி முழக்கம் செய்ய அழைப்பு விடுத்தல் நயக்கத் தக்கதாகும்.

14. இக்கவிதை வெளிப்பாட்டு முறையிலுள்ள சிறப்புக்களைக் கூறுக.

- எளிய சொற்கள்
- உணர்வு பூர்வமான நடை
- எதுகை,மோனை, உவமை, உருவக அணிப்பயன்பாடுகள்
- வாசகரை முன்னிலையில் விளித்துக் கூறல்
- வாசிக்கும் ஆர்வத்தை தூண்டல்
- சிறந்த ஓசைப்பாங்கு

15. பின்வரும் சொற்களின் கருத்தினைத் தருக.

- மகாசோதி - பேரொளி
- யாண்டும் - எல்லாவிடத்திலும்
- வாக்கு - சொல்
- தொண்டு - சேவை
- இருக்கை - ஆசனம்
- சர்வகலாசாலை - பல்கலைக்கழகம்
- முடி - தலை
- கோலமுறும் செய்தித்தாள் - விதவிதமான பத்திரிகை

# 02. பத்தி எழுத்துக்கள்

01. ‘மரம் என்பது உயர்திணை’, ‘மென்மையே வாழும்’ ஆகிய பத்திகளை எழுதியவர் யார்?
இவர் வகித்த பதவி யாது?
- கவிக்கோ அப்துல் ரஹ்மான்
- கல்லூரிப் பேராசிரியர்

02. கவிக்கோவின் ஆளுமைக்கு நான்கு உதாரணங்கள் தருக.
- கவிஞர், பத்திகையாளர், ஆய்வாளர், பேச்சாளர்

03. கவிக்கோ அப்துல் ரஹ்மானின் இலக்கியப் பணிகளை சுருக்கமாக குறிப்பிடுக.
- முட்டைவாசிகள், சொந்தச் சிறைகள், அவளுக்கு நிலாவென்று பெயர் முதலான நூல்களை வெளியிட்டமை
- புதுக்கவிதையில் குறியீடு என்ற ஆய்வு நூலை வெளியிட்டமை
- பால்வீதி, சுட்டுவிரல் முதலான கவிதை நூல்களின் ஆசிரியர்
- ஹைகூ, கஸல் முதலான பிறமொழிக் கவிதை வடிவங்களை தமிழில் பரப்பியர்

04. பத்தி எழுத்து என்பது யாது?
- ஏதேனும் ஒரு விடயம் பற்றி பத்திரிகைகள், சஞ்சிகைகளில் எழுதப்படுகின்ற கருத்துரைகள் பத்தி எழுத்துக்கள் எனப்படும். இது கட்டுரையின் மரபுகளை மீறி ஆக்கப்படும் ஒரு உரைநடை வடிவமாகும்.

## அ. மரம் என்பது உயர்திணை

05. மரம் உயர்திணை என்பதற்கு பத்தியாளர் கூறும் காரணங்களை எழுதுக.
- சாலையில்நடக்கும்போது மலர்சொரிந்து, பயணத்தை ஆசிர்வதித்து, வெயிலுக்கு குடைபிடித்து, களைப்படையும் போது தாய்ப்பாசத் தோடு மடியில் வைத்து மரங்கள் ஆசுவாசப்படுத்துதல்

- மனித வாழ்க்கையின் ஒவ்வொரு பருவத்திலும் மரங்கள் முக்கியத்துவம பெறல் : தொட்டில், வண்டி, ஏடு, கட்டில், ஊன்றுகோல், பாடை, உடன்கட்டை
- தாகத்திற்கு பானம், பசிக்கு உணவு, உடுத்த ஆடை, வசிக்க வீடு, நோய்க்கு மருந்து, பயணத்திற்கு உதவுதல், சுவாசத்திற்கு காற்றை சலித்துக் கொடுத்தல், மழையைத் தருவித்தல்
- சரித்திரத்திலும், சமயங்களிலும் மரம் முக்கியத்துவம் பெறல் : போதிமரமாக, காவல் மரமாக, வசந்த மரமாக, வீட்டுநெறி மரமாக இருத்தல்
- தொகுத்துப் பார்க்கின் மரமின்றி மனிதன் வாழ முடியாது. ஒப்பு நோக்கிப் பார்க்கின் மனிதனை விட மரமே பயன் அதிகம் அளிக்கிறது. இதனால் மரத்தை உயர்திணைக்குள் வைத்தல் தகும்.

06. மரங்களுடன் மனிதனை ஒப்பிடுமாற்றிலுள்ள சிறப்புக்களை விளக்குக.

- மண்ணில் வாழ்தல், பிறப்பு, இறப்பு என்பவற்றோடு ஒப்பிட்டு மரத்தின் பெருமை உரைத்தல் :

  உ-ம் : - மண் மனிதனுக்கு புதைகுழி ; மரத்துக்கோ கருவறை
  - மண்ணின் மைந்தன் மனிதனல்ல ; மரங்களே
  - பிறந்த இடத்தில் மரங்கள் பற்று வைக்கின்றன ; மனிதனோ செலவு வைக்கிறான்
  - மரங்கள் சாய்ந்தால் வீட்டுக்கு வரும் ; மனிதன் சாய்ந்தால காட்டுக்குச் செல்வான்
- புராண வள்ளல்களை நினைவூட்டியும், கொடை கொடுப்பதன் சிறப்பைச் சொல்லியும் மரத்தின் பெருமையை விளக்குதல் :

  உ-ம் : - மனிதர்களுக்கு ஒரு சிபி, ஒரு சீதக்காதி ; மரங்களிலே எல்லாமே சிபிகள், எல்லாமே சீதக்காதிகள் (புறாவுக்காக தன் உடல் அறுத்து கொடை கொடுத்தவன் சிபி, இறந்தும் கொடை கொடுத்தவர் சீதக்காதி)
  - மரம் கொடுப்பதற்காக கைகளை நீட்டுகிறது ; மனிதன் வாங்குவதற்காக கைகளை நீட்டுகிறான்.
  - மரம் அத்தனை கைகளாலும் கொடுக்கிறது ; மனிதன் வலக்கையால் கொடுப்பதை இடக்கையால் வாங்குகிறான்.

- வளர்வதினூடான ஏற்றத் தாழ்வு சொல்லி மரத்தை பெருமைப் படுத்தல்:

  உ-ம் : மரம் வானத்தை நோக்கி வளர்கிறது; மனிதன் புழுதியில் புரள்கிறான்.

**07. மரங்களினால் மனிதனுக்கு கிடைக்கப்பெறும் பயன்கள் யாவை?**

- நிழல்
- தாகத்திற்குப் பானம்
- பசிக்கு உணவு
- நோய்க்கு மருந்து
- உடுத்த ஆடை
- வசிக்க வீடு
- சுவாசத்திற்கான காற்று
- மழைக்கு ஆதாரம்

**08. மனித வாழ்க்கைப் பாதையில் மரங்கள் வகிக்கும் பாத்திரங்கள் யாவை?**

- குழந்தைப் பருவம் - தொட்டில்
- நடை பழகும் பருவம் - நடைவண்டி
- பள்ளிப் பருவம் - ஏடுகள்
- பயணத்தில் - சக்கரங்கள்
- கிழப் பருவம் - ஊன்றுகோல்
- மரணத்தின் பின் - பாடை, சிதை

**09. வரலாற்றுப் பாதையில் மரங்களின் உபயோகங்கள் என்ன?**

- போதி மரங்கள்
- காவல் மரங்கள்
- ஊர்ப் பொதுமன்ற மரங்கள்
- வசந்த மரங்கள்
- கல்லால மரங்கள்

**10. மனிதன் படைத்த மரங்கள் என பத்தியாளரால் குறிப்பிடப்படுபவை யாவை?**

- தூக்கு மரங்கள்
- சிலுவை மரங்கள்

- கழுமரங்கள்
- கொடிமரங்கள்

11. மனிதன் படைத்த மரங்களின் பண்புகள் யாவை?
    - மாமிசப் பட்சிணி மரங்கள்
    - மலர்களைத் தின்று முட்களை உற்பத்தி செய்யும் மரங்கள்
    - வெயிலை விநியோகிக்கும் மரங்கள்

12. மனிதன் நன்றி கெட்டவன் என்பதற்கு பத்தியாளர் கூறும் காரணம் யாது?
    - மரத்தின் தயவில் வாழ்ந்தாலும் மரத்தை வெட்ட மரத்திலிருந்தே கோடரிக்காம்பு தயாரிக்கிறான் என்பதினால்

13. இப்பத்தி எழுத்தாளர் தனது கருத்துக்களை முன்வைப்பதற்கு கையாண்ட உத்திகளை எடுத்துக் காட்டுக.
    - பத்தி வடிவத்தை கையாளல்
    - எளிமையான சிறுசிறு வசனங்கள்
    - உதாரணங்கள் மூலம் விளக்குதல்
    - ஒப்பீட்டு அடிப்படையில் கூறுதல்
    - கேள்விகளை எழுப்பி சிந்திக்கத் தூண்டுதல்
    - வாசகரை முன்னிலைப்படுத்தி விளித்துக் கூறல்

14. இப்பத்தி ஆசிரியரின் மொழி நடைச் சிறப்பு பற்றி உமது கருத்துக்களை தருக.
    - எளிமையான வாக்கிய அமைப்பு
    - சிறு சிறு வசனங்கள்
    - உணர்ச்சிபூர்வமான மொழிநடை
    - அணிப் பயன்பாடு
    - சிந்திக்கத் தூண்டும் நடை
    - எள்ளல் நடை

15. ஒத்தபொருள் தருக.
    - ஆசுவாசம் - ஆறுதல்
    - சலித்துக் கொடுத்தல் - வடிகட்டில் கொடுத்தல்
    - வீட்டுநெறி - கடவுளை அடையும் வழி

- சாலை - பாதை
- அத்தாணி மண்டபம் - அரசனின் கொலு மண்டபம்
- அம்பறாத்தூணி - அம்புக்கூடு
- வசவு - ஏச்சு
- தருக்கள் - மரங்கள்
- சிபி - சிபிச்சக்கரவர்த்தி
- சீதக்காதி - இறந்தும் கொடை கொடுத்த ஒரு வள்ளல்
- மாமிசபட்சணி - இறைச்சி (புலால்) உண்பவை

## ஆ. மென்மையே வாழும்

16. "வாழ்க்கை என்பது போராட்டம். இதில் வலிமையானவையே வாழும்" என்று கூறிய அறிஞர் யார்?
    - டார்வின்

17. "மென்மையானவையே நீண்ட நாள் வாழும்" என்று கூறிய அறிஞர் யார்? இவர் எந்நாட்டைச் சேர்ந்தவர்?
    - கன்ஃபூசியஸ்
    - சீன நாட்டைச் சேர்ந்தவர்

18. பத்தி ஆசிரியர் கூறும் 'பொது நம்பிக்கை' என்பது என்ன?
    - மென்மையானது சீக்கிரம் அழிந்துவிடும், வன்மையானது அழியாது

19. பழங்காலத்தில் போர் மூண்டால் வெளியிடப்படும் அறிவித்தல் என்ன?
    - முதியவர்கள், பெண்கள், குழந்தைகள் பத்திரமான இடத்திற்குச் சென்று விடுங்கள்

20. "வாளை உருவியவன் வாளால் சாவான்" என்று கூறும் சமய நூல் எது?
    - பைபிள்

21. பொருநராற்றுப் படையை எழுதியவர் யார்?
    - முடத்தாமக் கண்ணியார்

22. வலிமை பொருந்திய ஆங்கிலப்படையை வென்றவர் யார்? அவரது கொள்கையாது?

- மகாத்மா காந்தி
- அகிம்சை

23. இசையின் மென்மை பற்றி பொருநராற்றுப்படை கூறும் செய்தி யாது?
- பாலைப் பண், வழிப்பறிக் கொள்ளைக்காரர்களின் கொடிய மனத்தையும் மாற்றி ஆயுதங்களைக் கீழே போட்டுவிடச் செய்யும

24. "போர்க்களத்தில் பகைவரும் அஞ்சும் என் வலிமை இந்தப் பெண்ணின் வதன வனப்புக்குத் தோற்று அழிந்து விட்டதே, ஓ"
(1) இக்காட்சி இடம்பெறும் இலக்கியம் யாது?
(2) அது யாரால் எழுதப்பட்டது?
- திருக்குறள்
- திருவள்ளுவர்

25. குரு - சீடன் உரையாடல் மூலம் வெளிப்படுத்தப்படும் கருத்து யாது?
- வலிமையானவை சீக்கிரம் அழிந்துவிடும். மென்மையானவை நீண்ட நாள் இருக்கும். எனவே மனிதர்கள் மென்மையானவர்களாக இருந்தால் நீண்டநாள் வாழலாம்.

26. "மென்மையானது விரைவில் அழிந்துவிடும், வன்மையானது அழியாது" என்ற கூற்றுக்கு முரணாக பத்தி எழுத்தாளர் கூறும் கருத்துக்களை தெளிவு படுத்துக.
- கன்ஃபூசியஸ் - சீடன் உரையாடல் :
  நாக்கு மென்மையானது. பல் வலிமையானது. நாக்கு நாம் பிறந்ததில இருந்து இருக்கிறது. பல் பிறகுதான் முளைக்கிறது. நாக்கு சாகும் வரை இருக்கிறது. பற்கள் வயது முதிர விழுந்து விடுகின்றன.
- நெருப்பு - நீர் :
  நெருப்பு வன்மையானது. ஆனால் அந்த நெருப்பை மென்மையான நீர் அணைத்து விடுகிறது. நெருப்பு அழியும். நீர் அழியாது.
- மரம் - நாணல் :
  புயலில் வலிமையான மரம் விழுந்து விடுகிறது. மென்மையான நாணல் தப்பித்து விடுகிறது.
- மனிதன் வீடு - சிலந்தியின் வீடு :
  பூகம்பத்தில் மனிதன் கட்டும் வலிமையான வீடு உடைகிறது. மென்மையான சிலந்தியின் வீடு தப்பித்து விடுகிறது.

27. **மென்மை குறித்த அப்துல் ரஹ்மானின் நோக்கினை விளக்குக.**

- மென்மை அழியாதது
- மனிதர்கள் மென்மையானவர்களாக வாழ வேண்டும்
- சிலவேளைகளில் மென்மை கூட வன்மை பெறும்
- மென்மை தப்பிக்கும் ஆற்றல் பெற்றது
- மென்மையின் வெற்றி நுட்பமானது
- மென்மையின் வெற்றி அகவயமானது
- மனங்களைப் பிடிக்க உதவுவது மென்மையாகும்.
- மென்மைக்கே அழியா வெற்றியும், அதிக ஆயுசும் உண்டு
- மென்மை உண்மையாகும்போது அதுவே வன்மையாகிறது.

28. **வன்மை குறித்த அப்துல் ரஹ்மானின் நோக்கினை விளக்குக.**

- வன்மையின் வெற்றி புறவயமானது
- வன்மையான ஆண் பெண்ணை புறவயமாகவே ஆள்கிறான்
- வன்மையால் மண்ணைத்தான் பிடிக்க முடியும்
- வன்மையானவர்களுக்கு வரலாறு என்ற மயானத்தில் மட்டுமே இடம் கிடைக்கிறது.
- வன்மையின் வெற்றிக்கு அற்பாயுசு
- உண்மையில் மென்மையே வன்மை

29. **'மென்மையே வாழும்' என்பதை வலியுறுத்த பத்தியாளர் கூறும் காரணங்களை சுருக்கமாகத் தருக.**

- நாக்கு - பல் பற்றிய ஒப்பீடு
- காற்றும் புயலும் பற்றிய விளக்கம்
- வெப்பமும் ஒளியும் பற்றிய விளக்கம்
- உடலும் எக்ஸ் கதிர்களும் பற்றிய விளக்கம்
- போரில் வலிமையும் மென்மையும் செயற்படும் விதம்
- ரவுடிகள் பற்றிய விளக்கம்
- இசையின் மென்மை பற்றிய விளக்கம்
- ஆணையும் பெண்ணையும் ஒப்பிடுதல்

30. **"குருவே! கடைசியாக எங்களுக்கு ஏதாவது அறிவுரை கூறுங்கள்" இக்கூற்று யாரால், யாருக்கு, எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது?**

- சீடர் ஒருவரால்

Arasady Public Library
Municipal Council
Batticaloa.
Class No: 894.811
Acc No 332

- கன்ஃபூஷியஸ்'க்கு
- மரணப்படுக்கையில் கன்ஃபூஷியஸ் இருந்தவேளையில்

31. "நாக்கு மென்மையானது. பல் வலிமையானது. நாக்கு நான் பிறந்ததிலிருந்து இருக்கிறது. பல் பிறகுதான் முளைத்தது. வயது முதிர முதிர என் பற்கள விழுந்து விட்டன'' இக்கூற்று யாரால், யாருக்கு, எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது?
- கன்ஃபூஷியஸால்
- சீடருக்கு
- மரணப்படுக்கையில் அறிவுரை கேட்ட சீடருக்கு விளக்கமளிக்கும வகையில் வாய்க்குள் என்ன இருக்கிறது என்று கேட்டு, அதற்குப் பதிலளித்தபோது

32. இப்பத்தி எழுத்தாளர் தனது கருத்துக்களை முன்வைப்பதற்கு கையாண்ட உத்திகளை எடுத்துக் காட்டுக.
- பத்தி வடிவத்தை கையாளல்
- எளிமையான சிறுசிறு வசனங்கள்
- பெரியார்களின் வாழ்க்கை, (கன்பூஷியஸ், டார்வின், காந்தி) பண்டைய இலக்கியங்கள் (திருக்குறள், பொருநராற்றுப்படை) சமய இலக்கியம் (பைபிள்) முதலியவற்றை உதாரணம் காட்டிக் கூறல்
- ஒப்பீட்டு அடிப்படையில் கூறுதல்
- ஒற்றுமை வேற்றுமை காட்டி விளக்குதல்

33. பின்வரும் சொற்களுக்குப் பொருள் தருக.
- மற்போர் - மல்யுத்தம்
- வதனம் - முகம்
- மயானம் - சுடுகாடு
- பண் - இசை
- அற்பாயுசு - குறைந்த ஆயுள்
- தீர்க்காயுசு - நீண்ட ஆயுள்

Class No
Acc No
Arasady Public Library
Municipal Council
Batticaloa.

# 03. வாய்மொழிப் பாடல்

**01. வாய்மொழிப் பாடல் என்றால் என்ன?**

- எழுத்தறியா நாட்டுப்புற மக்களால் தங்கள் உள்ளத்து உணர்ச்சிக் கேற்ப வாழ்வின் பல்வேறு சந்தர்ப்பங்களில் பாடப்படும் பாடலகள் வாய்மொழிப் பாடல்கள் எனப்படும்.

**02. வாய்மொழிப் பாடல்கள் வேறு எப்பெயர்களால் அழைக்கப்படுகின்றன?**

- நாட்டார் பாடல்கள், கிராமியப் பாடல்கள், ஏடறியாப் பாடல்கள், எழுத்தறியாப் பாடல்கள்

**03. வாய்மொழிப் பாடல்களின் இயல்புகள் யாவை?**

- நாட்டுக்கு நாடு, பிரதேசத்திற்குப் பிரதேசம், சமூகத்திற்குச் சமூகம் வேறுபட்டு ஒலித்தல்
- பாடியவரை அறிய முடியாமை
- வாய்மொழியாகப் பரப்பப்படுதல் - ஊடுகடத்தப்படல்
- பெரும்பாலும் ஒரே வாய்ப்பாட்டிற்குள் அமைந்திருத்தல்

**04. வாய்மொழிப் பாடல்களின் பாடுபொருட்கள் யாவை?**

- கூட்டு வாழ்வையும், அதன் இன்ப துன்பங்களையும் பாடுதல்
- மனித வாழ்வின் பல்வேறு வளர்ச்சிப் படிகளின் உணர்வுகளைப் பாடுதல்
- தொழிலின் மேன்மை, மகத்துவம் பற்றிப் பாடுதல்
- பொழுது போக்காக பல்வேறு சுவைகளையும் அமைத்துப் பாடுதல்

**05. வாய்மொழிப் பாடல்களைப் பயில்வதன் பயன்கள் யாவை?**

- அனுபவப் பகிர்வு ஏற்படும்
- படிப்பினைகளைப் பெற்றுக் கொள்ளலாம்
- இரசணை மேம்படும்
- தனியாள், சமூக விமர்சன நோக்கு ஏற்படும்

**06. மருத்துவிச்சிப் பாடல் என்பது யாது?**

- பிரசவ சிகிச்சை மேற்கொள்கின்ற மருத்துவிச்சி குழந்தையைக் கையில் தூக்கியவாறு பாடும் வாய்மொழிப் பாடலாகும்.

**07. மருத்துவிச்சிக்கு வழங்கப்படும் சன்மானங்கள் எவை? எதற்காக அவை வழங்கப்படுகின்றன?**

- அரிசி, நெல், மிளகு
- பிரசவத்தில் தாயையும் குழந்தையையும் பாதுகாத்ததிற்காக

**08. மருத்துவிச்சியின் மனப்பாங்கு பற்றிய உமது கருத்தினை முன்வைக்குக?**

- எல்லோரும் கூட்டுக் குடும்பமாக வாழ வேண்டும் என்ற மனப் பாங்கு
- ஊரும், தேசமும் சிறப்பாக வாழ வேண்டும் என்ற எண்ணம்
- குருபக்தியுடன், இறை பக்தியையும் மதித்தல்
- பிறந்த குழந்தை செல்வம் பெருக வாழ வேண்டும் என்ற எண்ணமும், அக்குழந்தைக்கு உற்றார் உறவினரை அறிமுகப்படுத்தலும்.

**09. குழந்தை எவ்வாறெல்லாம் வாழவேண்டுமென மருத்துவிச்சி விரும்புகிறாள்?**

- அயலும் புடையும் வாழ, அன்னமும் சுற்றமும் வாழ, ஆச்சியும் அப்புவும் வாழ, அம்மானும் மாமியும் வாழ இவர்களோடிணைந்து குழந்தை வாழ வேண்டும் என விரும்புகிறாள்.
- அரிசி, நெல், மஞ்சல், மிளகு, உள்ளி, இஞ்சி, உப்பு, காசு போன்ற செல்வங்கள் பெற்று அரசராய் வாழ வேண்டுமென விரும்புகிறாள்.
- கோச்சியும் கொப்பரும், பேத்தியும் பேரனும், பூட்டியும், பூட்டனும், கொம்மானும் மாமியும், குஞ்சியாச்சியும், குஞ்சியப்புவும், பெரியாச்சியும் பெரியப்புவும் வாழும் படியாக (நீண்ட ஆயுளுடன்) குழந்தை வாழ வேண்டும் என்கிறாள்.
- ஊரும் தேசமும் வாழ ஆசிரியனுக்கும், இறைவனுக்கும் நல்ல பிள்ளையாய் இருந்து வாழ வாழ்த்துகிறாள்.

**10. இப்பாடலில் கிராமிய மண்வாசனை வெளிப்படுத்தப்படுமாற்றினை தெளிவுபடுத்துக.**

- கிராமத்து உறவுமுறைகளை அறிமுகப்படுத்துதல்
- கிராமங்களில் விளையும் வளமானதும், மங்களகரமானதுமான பொருட்களைக் கூறி வாழ்த்துதல்
- கிராமிய கூட்டுக்குடும்ப முறையமைப்பை வெளிப்படுத்துதல்,

இதனூடாக சமூக உறவுகளைப் பேணுதல்

- குருவையும், இறைவனையும் மதிக்கும் பாங்கு கிராமத்தில் இன்றும் இருத்தலைக் கூறுதல்
- எல்லோரும் நன்றாய் வாழ வேண்டும் என்ற கிராமிய பொதுவுடமைத தத்துவம்

**11. இப்பாடல் பகுதியில் வெளிப்படுத்தப்படும் அழகியல் உணர்வினை வெளிப்படுத்துக.**

- எதுகை மோனை அணிப்பயன்பாட்டில் பாடல் அமைதல்
- பாடலில் வெளிப்படும் சிறந்த ஓசை நயம் இனிமையளித்தல்
- கேள்விகேட்கும் பாங்கும் அதற்குப் பதில் சொல்லும் முறையும் அழகியல் உணர்வை தோற்றுவித்தல்
- உறவுமுறைகளை வரிசைப்படுத்துவதில் கிராமத்திற்கேரியுத்தான தனித்தன்மையும் அழகியல் உணர்வும் எடுத்துச் சொல்லப்படல்

**12. இப்பாடல் பாடப்பட்ட முறையில் உள்ள சிறப்புக்களைக் கூறுக.**

- பேச்சு வழக்குச் சொற்களின் பாவனை
- பிரதேச வழக்குச் சொற்கள் கையாளப்படல்
- சிறந்த ஓசைநயம்
- எதுகை, மோனை அணிப்பயன்பாடு

**13. இப்பாடலில் இடம்பெறும் உறவுமுறைகளைக் குறிப்பிடுக.**

- கோச்சி - ஆச்சி, அம்மா (ஆச்சி தாயைக் குறிக்கிறது)
- கொம்மான் - அம்மான் (மாமாவைக் குறிக்கிறது)
- குஞ்சியாச்சி - சிறிய தாய்
- குஞ்சியப்பு - சிறிய தந்தை
- பெரியாச்சி - பெரிய தாய்
- பெரியப்பு - பெரிய தந்தை

# 04. இனிது என

## அ. முளிதயிர்

01. 'முளிதயிர்..' என்று ஆரம்பிக்கும் சங்கப்பாடலை எழுதியவர் யார்? சங்கநூல் தொகுப்பில் இவரது எத்தனை பாடல்கள் இடம்பெற்றுள்ளன?
- *கூடலூர்க்கிழார்*
- *நான்கு பாடல்கள்*

02. 'முளிதயிர் பிசைந்த..' பாடலின் மையக்கருத்து என்ன?
- *செவிலித்தாய் கடிநகர் சென்று தன் வளர்ப்பு மகள் மகிழ்வாக வாழ்வதை அவளைப் பெற்ற நற்றாய்க்கு எடுத்துச் சொல்லல்*

03. 'முளிதயிர்..' பாடல் யாரின் கூற்றாக அமைந்துள்ளது?
- *செவிலித்தாய் கூற்றாக*

04. செவிலித்தாய் - நற்றாய் வேறுபாடு யாது?
- *செவிலித்தாய் - வளர்ப்புத் தாய், நற்றாய் - பெற்ற தாய்*

**முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல**
**கழுவுறு கலிங்கம் கழா அது உடீஇக்**
**குவளை உண்கண் குய்ப்புகை கழுமத்**
**தான்துழந் தட்ட தீம்புளிப் பாகர்**
**இனிதெனக் கணவன் உண்டலின்**
**நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே**

05. இப்பாடலின் பொருளைத் தருக.
அடிக்கோடிட்ட பகுதியின் சிறப்பை விளக்குக.
- *நன்கு தோய்ந்த கட்டித்தயிரை தன் காந்தள் போன்ற மென்மையான விரல்களால் பிசைந்தாள். அவ்வேளையில் நழுவிச் செல்லும் தன் உயர்ந்த ஆடையின் பெறுமதியையும் பொருட்படுத்தாது அவ்விரல்களாலேயே சரி செய்து விடுகிறாள். தாளித்த புகை அவளது குவளை மலர் போன்ற கண்களைச் சூழ்ந்து வருத்திய போதும் தலைவனுக்கு தான் செய்யும் கறியின் சுவை கெட்டு விடக்கூடாதே எனக் கருதி துளாவித் துளாவிச் சமைத்து விடுகிறாள்.*

உணவுண்ட தலைவனோ புளிக்குழம்பினை இனிது எனக்கூறி விருப்புடனே உண்பதனால் ஒளிபடைத்த தலைவியினுடைய முகம் மகிழ்ச்சியினால் பூரித்து விடுகிறது.

- தலைவியினுடைய கைவிரல்கள் காந்தள் மலருக்கு உவமிக்கப் பட்டு சிறப்பிக்கப்படுகின்றன.
  (வடிவத்திலும் மென்மையிலும் காந்தள் மலர்கள் தலைவியின் விரலுக்கு ஒப்பாகின்றன)

**06. இப்பாடலில் தலைவனிடத்தில் தலைவி கொண்ட அன்பு எவ்வாறு வெளிப்படுத்தப்படுகிறது?**

- தலைவனுக்கு விருப்பமான உணவைத் தயாரித்தல்
- உயர்ரக ஆடை நழுவிய போதும் அதைச் சரிசெய்ய நேரமெடுக்காமல் சமைப்பதிலேயே குறியாய் இருத்தல்
- புகை கண்களை வருத்தியபோதும் கறியின் சுவை கெட்டுவிடக் கூடாதென்று துளாவிச் சமைத்தல்
- தலைவன் இனிதென உண்பதைக் கண்டு முகம் பூரித்தல்

**07. தலைவியினுடைய செயற்பாடுகளினூடாக வெளிப்படும் இல்லறப் பாங்கை விளக்குக.**

- கணவனுக்கு சுவையாகச் சமைத்துக் கொடுத்தல்
- உணவில் எக்குறையும் வந்துவிடக்கூடாதென்பதற்காக தன்னை வருத்துதல்
- தலைவன் உண்பதை பார்த்து உள்ளம் பூரித்தல்

**08. 'கடிநகர்' என்றால் என்ன?**

- பெண் திருமணம் செய்து கொண்டு வாழும் இல்லம்

## ஆ. அமுதம்

**09. 'அமுதம்' என்ற பாடலைப் பாடிய கவிஞர் யார்? இவர் எங்கே பிறந்தார்?**

- க. சச்சிதானந்தன்
- யாழ்ப்பாணம் நல்லூர்

**10. க. சச்சிதானத்தனுடைய இலக்கியப் பங்களிப்பு பற்றிக் கூறுக.**

- இவர் கவிஞரும், எழுத்தாளருமாவார்
- தண்ணீர்த்தாகம் இவரது முதற்சிறுகதை
- ஆனந்தன் என்ற புனைபெயரில் இவர் எழுதிய எட்டுச் சிறுகதைகள *1939-1944* காலகட்டத்தில் ஈழகேசரியில் வெளிவந்தன.

**11. 'அமுதம்' என்ற பாடலின் மையக்கருத்து யாது?**

- மனைவி சமைத்துக் கொடுத்த உணவை பயணத்தின் இடையில் சாப்பிடும் கணவனுக்கு அந்த உணவு அவன் உள்ளத்தில் ஏற்படுத்தும உணர்வுகள்

**12. மனைவி சமைத்த உணவைக் கணவன் எவ்வாறெல்லாம் புகழ்ந்துரைக கின்றான்?**

- மணம் வீசுவது, அன்பு கலந்தது, உப்புக்கசந்தாலும் இனிப்பது, விண்ணின் அமுதத்தைப் போன்றது, தெய்வ அமுதம் போன்றது, அன்பு மணப்பது, விந்தை ருசியை உடையது, பச்சை அமுதம் போன்றது, அன்புக் கயிற்றால் சுற்றிய கட்டுப்பொதி.

**13. அமுதம் என்ற தலைப்பு இக்கவிதைக்கு பொருந்துமாற்றினை விளக்குக**

- கணவன் மீது மிகுந்த அன்புகொண்ட மனைவி கணவனின் பிரயாண அவசத்தில் சமைத்துத் தந்தது
- பிரயாணத்தின் இடையில் சாப்பிடும் உணவுக்குத் தனி ருசி உண்டு
- விண்ணின் அமுதம், தெய்வ அமுதம், பச்சை அமுதம் என்று கணவன் அவ்வுணவை அமுதத்திற்கு ஒப்பிட்டுக் கூறல்
- அன்பு கொண்டவர், எதை எப்படிச் சமைத்தாலும் அது அமுதம் போலவே தோன்றும்

**14. 'விட்டுப் பிரிகையிற் சொட்டுக் கண்ணீர்பட்ட விண்ணின் அமுதமையா' இவ்வடியில் காணத்தக்க இலக்கியச் சிறப்பை குறிப்பிடுக.**

- பிரிவின் துயரும், உணவின் சிறப்பும் கூறப்படுகின்றது. கணவனைப் பிரியும் போது மனைவியின் கண்களில் இருந்து வெளிப்படும் கண்ணீர் உணவுப் பொட்டலத்தில் படுவது பிரிவை மேலும் துயரமாக்குகிறது. அக்கண்ணீர் பட்டதால் கணவனுக்கு அவ்வுணவு விண்ணின் அமுதத்தைப் போலாகிறது.

**கீழே தரப்பட்டுள்ள பாடற்பகுதியை வாசித்து அதன் கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்குக.**

தங்க வளைக்கைகள் தொட்டுச் சமைத்தது
சாலக்கமழு தையா - இதில்
அங்கமெ லாம்மிகப் பொங்கி வழிந்திடும்
அன்புங் கலந்த தையா

கொட்டிய உப்புக் கசப்பதென்றாலுமுள்
கூடியினிக்கு தையா - இது
விட்டுப் பிரிகையிற் சொட்டுக் கண்ணீர்பட்ட
விண்ணின் அமுதமையா

சொன்னபடிநட வாத துடிப்பயல்
தொட்டுச் சுவைத்ததையா - இது
சின்னஞ் சிறுகைக் குழந்தை யளைந்தது
தெய்வ அமுதமையா

ஆகக் கரிந்து பொரிந்ததென் றாலுமே
அன்பு மணக்கு தையா - இது
வேகவைக் காததென் றாலும் எனக்கொரு
விந்தை உருசி யையா

ஊது குழற்சத்தம் கேட்டவ திப்பட்டு
ஓடிவருகை யிலே - இது
பாதி வழிவந்து தாமரைக் கைதந்த
பச்சை அமுதமையா

கட்டிய அன்புக் கயிற்றினிற் சுற்றிய
சுட்டுப் பொதியி தையா - இதைத்
தொட்டுச் சுவைக்கையில் உள்ளமெல் லாமொரு
சோதி மிளிரு தையா

01. **கவிஞரின் மனைவி, குழந்தைகள் பற்றிய சித்திரிப்பு இக்கவிதையில் எடுத்துக் கூறப்படுமாற்றை விளக்குக.**

- *மனைவி* - *தங்க வளையல்கள் அணிந்த கைகளையுடையவள்*
  - *தாமரை போன்ற கைகளைகளையுடையவள்*
  - *கணவன் மீது அளவற்ற அன்புடையவள்*
  - *கணவனின் பிரிவைத் தாங்க முடியாதவள்*

குழந்தைகள் - உணவைத் தொட்டுச் சுவைக்கும் சொன்னபடி நடவாத ஒரு துடிப்பயல்

- உணவை அளையும் சின்னஞ் சிறு கைக்குழந்தை

**02. கொட்டிய உப்புக் கசப்பதென்றாலுமுள் கூடியினிக்குதையா - இத்தொடருக்குப் பொருத்தமான இரு தொடர்களை பாடலில் இருந்து எழுதுக.**

- *1.* ஆகக் கரிந்து பொரிந்ததென்றாலுமே அன்பு மணக்குதையா
  *2.* இது வேகவைத்காதது என்றாலும் எனக்கொரு விந்தை உருசியையா

**03. பயணத்திற்காக அவசரத்தில் சமைக்கப்பட்ட உணவு என்பது புலப் படுமாற்றை விளக்குக.**

- உப்புக்கசத்தல், ஆகக் கரிந்து போயிருத்தல், வேகவைக்காதிருத்தல்

**04. இப்பாடலில் இடம்பெற்றுள்ள அணிகளை எடுத்துக் காட்டுக.**

- தாமரைக் கைகள் - உவமை அணி (உவமைத் தொகை)
  கைகள் தாமரை மலருக்கு ஒப்பிடப்பட்டுள்ளது
  அன்புக்கயிறு - உருவக அணி
  அன்பு கயிறாக உருவகிக்கப்பட்டுள்ளது.

**05. இக்கவிதை வெளிப்பாட்டு முறையிலுள்ள சிறப்புக்களைக் கூறுக**

- எளிமையான சொல்லாட்சி
- கிராமியம் இசை வடிவம் சார்ந்த ஓசைப்பாங்கான பாடலமைப்பு
- அணிப்பயன்பாடு
- சிறப்பான உணர்ச்சி வெளிப்பாட்டுத் தன்மை

**06. ஒத்த பொருள் தருக.**

- சாலக் கமழுதல் - மிகவும் (மணம்) வீசுதல்
- அங்கம் - உடலுறுப்பு
- அமுதம் - இனிமையான உணவு
- அளைதல் - பிசைதல்
- விந்தை - புதுமை
- அவதி - துன்பம்
- சோதி - ஒளி

# 05. தாய்ப்பசு

01. தாய்ப்பசு என்ற சிறுகதையை எழுதியவர் யார்? இவர் எவ்விடத்தைச் சேர்ந்தவர்? இவரது காலம் யாது?
- *அகிலன்*
- *தமிழகம், 1922 - 1988*

02. இவர் எழுதிய நாவல்கள் நான்கைக் குறிப்பிடுக. அவற்றுள் எவை? எவ்விருதுகள் பெற்றன?
- *சித்திரப்பாவை, வேங்கையின் மைந்தன், பாவை விளக்கு, கயல்விழி*
- *சித்திரப்பாவை - ஞான பீட விருது*
  *வேங்கையின் மைந்தன் - சாகித்திய அகடமி விருது*

03. அகிலனின் எந்நாவல்கள், எத்திரைப்படங்களாக வெளிவந்துள்ளன?
- *பாவை விளக்கு - பாவை விளக்கு*
  *கயல்விழி - மதுரையை மீட்ட சுந்தர பாண்டியன்*

04. அகிலனின் படைப்புக்கள் எம்மொழிகளில் பெயர்க்கப்பட்டுள்ளன?
- *மலாய், சீனம், ரஷ்ய மொழிகளில்*

05. தாய்ப்பசு என்ற சிறுகதையின் மையப்பொருள் என்ன?
- *மனிதனோடு ஒட்டி உறவாடும் தாய்ப்பசு ஒன்றின் நேயம்*

06. தாய்ப்பசு சிறுகதையின் கதாபாத்திரங்கள் யாவை?
- *மாடசாமி (பால்காரன்)*
- *பிறிதொரு பால்காரன்*
- *தாய்ப்பசு*
- *காளைமாடு*
- *கன்று*
- *குமரன்*

07. மாடசாமி கன்றுக்குட்டியை கட்டி வைக்காததன் நோக்கம் யாது?
- *கன்று ஈன்றவுடன் முதலில் சுரக்கும் சீம்பாலை விற்க முடியாது*

என்பதாலும், அதனைக் கன்றே குடித்துவிடட்டும் என்றும்.

**08. மாடசாமியின் கன்றுக்குட்டிக்கு கிடைத்த தோழன் யார்?**

- மாடசாமியின் மகன் குமரன்

**09. 'குமரனும் தாய்ப்பசுவின் குழந்தைதான்' இக்கூற்றின் பொருத்தப் பாட்டை விளக்குக.**

- குமரனின் தாய் குமரனைப் பெற்றாளே தவிர அவளிடம் பிள்ளையை வளர்ப்பதற்குரிய பால் இருக்கவில்லை. தாய்ப்பசுவின் பால்தான் குமரனுக்கும் உணவாக இருந்தது.

**10. கன்றுக்கு பால் குடிக்க முடியாமல் போனதிற்கான காரணம் யாது?**

- கழுத்தில் சங்கிலியும், வாய்ப்பூட்டான கூடையும் இடப்பட்டமை

**11. பால் குடிக்க முடியாமல் போன கன்றுக்குட்டியின் உணர்வையும், நிலையையும் குறிப்பிடுக.**

- தாயின் மடியில் முட்டிப்பார்த்தல், மோதிப்பார்த்தல், கதறிப் பார்த்தல், தாயை ஏக்கத்தோடு பார்த்தல்.
- கன்னங்கரிய பெருவிழிகள் இரண்டும் ஒளி இழந்து வந்தன. அதனால் துள்ள முடியவில்லை. குதிக்க முடியவில்லை. மேனியில எலும்புக்கூடு வெளித்தெரிய ஆரம்பித்தது.

**12. கன்றுக் குட்டியின் தந்தை எது?**

- அடுத்த வீட்டுக் செவலைக்காளை

**13. கன்று பால் குடிக்காததால் அதன் தாயும், தந்தையும் அடையும் துயரத்தை விபரிக்குக.**

- தாய் - வேதனையைத் தாங்க முடியாத் தன்மை
  ஏதும் செய்ய முடியாத நிலை
  கன்றை ஏக்கத்தோடு பார்த்தல்
- தந்தை - அடித்தொண்டையில் இருந்து குரல் எழுப்புதல்
  குறுக்கே நிற்கும் சுவரில் தன் கொம்புகளை மோதுதல்
  மூச்சுவிடுவதற்குப் பதிலாக நெருப்புக் கனலைக் கக்குதல்

**14. "செய் செய் நான் எதைச் செய்தேனோ அதைத்தான் நீயும் செய்துகிட்டு வர்றே!'' இக்கூற்றில் எதைச் செய்ததாக பால்காரன் கூறுகிறான்?**

- கன்றுக்குட்டிக்கு பால் கொடுக்காமல் பட்டினி போட்டுக் கொன்றதை

15. பால்காரன் மாடசாமிக்கு மறைமுகமாகச் செய்துவிட்டுப்போன உபதேசம் யாது?
    - மனிதர்களையும்சரி, மிருகங்களையும்சரி வயிற்றில் அடித்து பட்டினி போட்டு அணுஅணுவாகக் கொன்றால், அதைத் தடுப்பதற்கு எந்தச் சட்டமுமில்லை என்பதை

16. அடுத்தவீட்டுக் காளை, கிராமம் மற்றும் நகரத்தில் இருந்தபோது எவ்வெவற்றிற்குப் பயன்பட்டது?
    - கிராமத்தில் மஞ்சு விரட்டிற்கு, நகரத்தில் பார வண்டி இழுப்பதற்கு

17. 'தாய்ப்பசு' என்ற சிறுகதையில் பசுவின் தாய்மை உணர்வு வெளிப்படும சந்தர்ப்பங்கள் மூன்றினை எழுதுக.
    - தன் நாவினால் கன்றுக் குட்டியை தடவுதல்
    - கன்றைப் பார்த்ததும் ஏற்படும் பெருமிதம்
    - கன்றைக் கண்டதும் மடியில் பால் சுரத்தல்

18. "பசுவின் மடியும் பால் சுரந்தது; கண்களில் நீரும் வழிந்தது" என்ற வரிகள் உணர்த்தும் உணர்வு எத்தகையது? விளக்குக.
    - சோகம் / இரக்கம்
    - மடியில் பால் சுரப்பது பசுவின் தாய்மை உணர்வையும், கண்களில் நீர் வழிவது தன் இறந்த கன்றை நினைத்துமாகும். தன் கன்றைப் பிரிந்த சோகத்திலும் பசு பால்சுரப்பது இரக்க உணர்வைத் தோற்று விப்பதாகும்.

19. காளை குமரனைத் தாக்குவதற்குக் காரணமாய் அமைந்த சம்பவத்தை விளக்குக.
    - குமரனின் தந்தையாகிய மாடசாமி காளையின் கன்றைப் பட்டினி போட்டுக் கொன்று விட்டான். இதற்குப் பழிதீர்க்கவே மாடசாமி யின் மகனான குமரனைப் பழிதீர்க்க காளை முயன்றது. "கொலைக்குக கொலை! பழிக்குப் பழி" என்ற அதன் கூற்றிலிருந்து இது புலப் படுகிறது.

20. "கிடாரிக் கன்னுக்குட்டியா இருந்தாலும் பரவாயில்லை. வளர்ந்தாலும்

**நாளைக்குப் பால் கொடுக்கும். நல்ல விலைக்கு யாரும் கேட்டால் கொடுத்திடலாம்'' இக்கூற்று யாரால் யாருக்கு எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது?**

- *வழிப்போக்கனான பால்காரனால்*
- *மாடசாமிக்கு*
- *வழிப்போக்கனான பால்காரனை அழைத்து மாடசாமி பேச்சுக் கொடுத்துக் கொண்டிருந்த வேளையில்*

21. **''என்ன செய்யறதுன்னுதான் எனக்கும் புரியலே. ஒரு நாளைக்கு இதுவே ஒரு படி பாலைக் குடிச்சிடும் போலே இருக்கு!'' இக்கூற்று யாரால் யாருக்கு எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது?**

- *மாடசாமியால்*
- *வழிப்போக்கனான பால்காரனுக்கு*
- *கன்றை வைத்து என்னசெய்யப் போகிறாய் என்று வினவிய சந்தர்ப் பத்தில்*

22. **''செய் செய் நான் எதைச் செய்தேனோ அதைத்தான் நீயும் செய்துகிட்டு வர்றே! துணிஞ்சு செய்! இன்னம் ஒரு வாரம் இப்படியே செய்தீன்னா தன்னாலே எல்லாம் சரியாகப் போகும்'' இக்கூற்று யாரால் யாருக்கு எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது?**

- *வழிப்போக்கனான பால்காரனால்*
- *மாடசாமியாமிக்கு*
- *மடசாமியின் பேச்சை நம்பாத பால்காரன் சிரித்துவிட்டுக் கூறிய சந்தர்ப்பம்*

23. **"சீ நீ என்ன, மனிதனைப் போல் கேவலமாய் நடந்து கொள்கிறாய்? குமரனும் என் பால் குடித்து வளர்ந்தவன்!.... உனக்கு ஏன் இவ்வளவு வெறி வந்துவிட்டது'' இக்கூற்று யாரால் யாருக்கு எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது?**

- *தாய்ப்பசுவால்*
- *தந்தையான காளைக்கு*
- *கொலைக்குக் கொலை பழிக்குப் பழி என்று ஆவேசமாய் காளை குமுறியதற்கு பதிலளித்த சந்தர்ப்பத்தில்*

24. **"சீ நீ என்ன, மனிதனைப் போல் கேவலமாய் நடந்து கொள்கிறாய்?'' இக்கதை கூறும் மனிதனின் கேவலமான பழக்கங்களை பட்டியல் படுத்துக.**

- பசுவானது கிடாரிக்கன்றையே ஈனவேண்டுமென நினைத்தல்
- நன்றி மறத்தல்
- கன்றுக்கு கழுத்துச் சங்கிலியும், வாய்ப்பூட்டும் இடல்
- கன்றுக்கு பால் கொடுக்காது பசுவின் மொத்த பாலையும் கறந்து வியாபாரம் செய்தல்
- பசுவை ஏமாற்றி பால் கறத்தல்
- பட்டினி போட்டு கன்றைக் கொலை செய்தல்
- கொலை செய்யத் தூண்டுதல், ஆலோசனை வழங்குதல்

**25. 'தாய்ப்பசு' என்ற தலைப்பு இக்கதைக்கு பொருந்துமாற்றை விளக்குக.**

- பசு, தாய்ப்பசுவாக இருப்பதில் பெருமிதம் கொள்ளுதல்
- தன் கன்றையும், தன் முதலாளியின் மகனான குமரனையும் தன் பிள்ளைகள் போல் நினைத்தல்
- தன் கன்றிடம் அளவற்ற அன்போடிருத்தல்
- காளை குமரனை கொல்ல வந்தபோது குமரனுக்காக தன் உயிரையும் பொருட்டாக மதிக்காமை
- பசு, தாய்மைக்கேயுரிய பொறுமையோடிருத்தல்

**26. 'ஜீவகாருண்யத்தின் தேவையை இச்சிறுகதை வலியுறுத்துகிறது.' விளக்குக.**

- கன்றுக்குட்டிக்கு கழுத்துச் சங்கிலியோடு வாய்ப்பூட்டான கூடையும் போட்டு அது நினைத்த நேரம் பால் குடிக்காமல் பண்ணுதல்
- பட்டினிபோட்டு கன்றுக்குட்டியை கொலை செய்தல்
- வைக்கோல் போர் அடைத்த கன்றுக்குட்டியை தாய்ப்பசு முன் நிறுத்தி ஏமாற்றிப் பால் பெறல்
- தாய்ப்பசு, காளை போன்றவற்றின் துயரம்
- தாய்ப்பசு குமரனையும் தன் மகனாக ஏற்றல், அவனுக்கும் பால் கொடுத்தல், இறுதியில் குமரனைக் காப்பாற்றுதல்
- கதைமுடிவு உணர்த்தும் அனுதாபம்.
- மிருகங்கள் மனிதர்கள் மீது அன்பு வைக்கும்போது மனிதர்கள் மிருகங்கள் பற்றி அறியாமையில் இருத்தல்

  இவ்வகையான காரணங்கள் ஜீவகாருண்யத்தின் தேவையை இக்கதைமூலம் உணர்த்துவதாகக் கொள்ளலாம்.

27. **இக்கதை கூறவரும் படிப்பினைகளைத் தருக.**

- ஜீவகாருண்யம் பேணல்
- மிருகவதை கூடாது
- மனிதனை அண்டிப் பிழைக்கும் உயிர்களை, அவற்றின் உணர்வுகளை மனிதன் புரிந்து கொள்ள முயல வேண்டும்.
- மிருகங்களை ஏமாற்றுதல் கூடாது.
- நன்றி மறவாமை
- தாய்மையின் உயர்வு

28. **மாடசாமி, தாய்ப்பசு, காளை மாடு ஆகிய பாத்திரங்களின் இயல்புகளை சுருக்கமாகக் குறிப்பிடுக.**

- மாடசாமி : பேராசைக்காரன். பிறர்சொற் கேட்பவன். கன்றினை பட்டினி போட்டு கொன்றவன். சுயநலமிக்கவன். மிருகங்களின் உணர்வை புரியாதவன்.

  தாய்ப்பசு : காளையைக் கன்றாகப் பெற்றதில் பெருமைப் படுவது. கன்றின் மீதும் முதலாளியின் மகன் குமரன் மீதும் அளவற்ற பாசத்தை வைத்திருப்பது. துயரத்தை உள்ளத்திற்குள் மறைந்து வைத்திருப்பது. தாய்மையின் மொத்த உருவாகத் திகழ்வது.

  காளை மாடு : பசுவின் மீதும், கன்றின் மீதும் அளவற்ற பாசம் கொண்டது. மஞ்சுவிரட்டில் பிரபலமானது. கோபம் மிக்கது. பழிவாங்கத் துணிந்தது. ஈற்றில் பசுவின் சொற்கேட்டு பொறுமை காப்பது.

29. **கதையின் மொழிநடை குறித்து கருத்துரைக்குக**

- சிறுசிறு வாக்கியங்கள்
- ஆர்வத்தைத் தூண்டும் நடை
- பேச்சுத்தமிழின் பயன்பாடு
- உணர்ச்சிச் செறிவான வாக்கிய அமைப்பு

30. **அரும்பதங்களின் பொருள் தருக.**

- கிடாரிக் கன்று - ஆண் கன்று (நாம்பன்)
- சீம்பால் - கன்று ஈன்றவுடன் சுரக்கும் மஞ்சல் நிற பால்
- செவலைக் காளை - சிவந்த நிறமுடைய நாம்பன் மாடு
- மஞ்சு விரட்டு - ஜல்லிக்கட்டு (காளை அடக்கல்)

# 06. கிட்கிந்தைப் படலம்

01. கிட்கிந்தைப் படலம் எவ்விலக்கியத்தில் இடம்பெறுகின்றது?
- தமிழில் - கம்பராமாயணம்
  வடமொழியில் - இராமாயணம்

02. இராமாயணத்தை வடமொழியில் இயற்றியவர் யார்? இராமாணத்தில் கம்பர் செய்த மாற்றம் என்ன?
- வால்மீகி
- வால்மீகி எழுதிய இராம கதையை தமிழ்ப் பண்பாட்டு செல்நெறியைத தழுவி கம்பராமாயணம் எழுதியமையாகும்.

03. கம்பரால் எழுதப்பட்ட சிற்றிலக்கியங்கள் யாவை?
- ஏர் எழுபது
- சடகோபர் அந்தாதி
- திருக்கை வழக்கம்

04. கம்பராமாயணம் எத்தனை காண்டங்களைக் கொண்டது? அவையெவை?
- ஆறு காண்டங்களை
- பாலகாண்டம், அயோத்தியா காண்டம், ஆரணிய காண்டம், கிட்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டம்

05. இராமாயணத்தின் / கம்பராமாயணத்தின் கதாநாயகன் யார்?
- இராமன்

06. கிட்கிந்தைப் படலத்தில் வரும் பாத்திரங்கள் யாவர்?
- இராமன், இலக்குமணன், அனுமன், தாரை, வானர மகளிர் குழுக்கள்

07. கிட்கிந்தைப் படலத்தின் கதைச் சுருக்கத்தைக் கூறுக.
- கார்காலம் கடந்தும் சுக்ரீவன் வராமையால், இராமனும் இலக்கு மணனும் ஆலோசித்தல்
- இராமன் இலக்குமணனைக் கிட்கிந்தைக்குச் சென்றுவரப் பணித்தல

- இலக்குமணனன் நகரத்திற்குள் நுழைதல், வானரர்கள் தாரையிடம ஆலோசனை கேட்டல்
- அதற்கு அனுமான் ஓர் ஆலோசனை கூறல்
- தாரை இலக்குமணனைத் தடுப்பது போல் நிற்றல்
- வானர மகளிர் கூட்டம் தோன்றல், இலக்குமணன் அவர்களைப் பார்க்க அஞ்சுதல்
- தாரை இலக்குமணனைப் புகழ்ந்து கூறல்
- தாரையின் நிலையை நோக்கிய இலக்குமணன் வருந்தி நிற்றல்

**கீழ்வரும் பாடல்களின் பொருளையும் தடித்த எழுத்துக்களிலுள்ள தொடர்களின் சிறப்பையும் தருக.**

**01. கார்காலம் கடந்தும் சுக்கிரீவன் வராமையால், இராமனும், இலக்குமணனும் ஆலோசித்தல்**

அன்னகாலம் அகலும் அளவினில்
<u>முன்னை வீரன், இளவலை, ''மொய்ம்பினோய்!</u>
சொன்ன எல்லையின் ஊங்கினும் தூங்கினன்;
மன்னன் வந்திலன்; என் செய்தவாறு அரோ?''

**பொருள :** அத்தகைய கார்காலம் முடிந்த அளவில், மூத்தவனும், வீரனும், சிங்கம் போன்றவனுமான இராமன், தன்தம்பி இலக்குமணனை நோக்கி, "வலிமையானவனே! நாம் கூறிய கார்கால எல்லையாகிய நான்கு மாதங்கள் கழிந்தும் வராது, அதற்கு மேலும் காலம் தாழ்த்திக் கொண்டிருக்கிறானே இந்த மன்னனான சுக்கிரீவன்? இவன் என்ன செய்கிறான்'' என்று கேட்டான்.

**சிறப்பு :** இராமனின் சிறப்பும் இலக்குமணனின் சிறப்பும் கூறப்படுகின்றது. சிங்கம் போன்ற வீரன் என்று உவமை அணியினூடாக இராமன் சிறப்பிக்கப்படுகின்றான். இராமன், இலக்குமணனை வலிமையானவன் என்று அழைப்பதினூடாக இலக்குமணன் சிறப்பிக்கப்படுகின்றான்.

02. ''பெறல் அரும் திருப்பெற்று, உதவிப் பெருந்
திறன் நினைந்திலன்;<u>சீர்மையின் தீர்ந்தன்;</u>
<u>அறம் மறந்தனன்;</u> அன்புகிடக்க; நம்
மறன் அறிந்திலன்; வாழ்வின் மயங்கினான்''

**பொருள :** ''யாவராலும் எளிதில் பெறுவதற்கு அரிய அரசச் செல்வத்தையும், இழந்த மனைவியையும், நம் உதவியால் பெற்ற பெரிய தகுதியை நினைவிற் கொள்ளாது மறந்து விட்டான் போலும். அவன் தனது நல்லொழுக்கமான மேன்மையிலிருந்து நீங்கி விட்டான்; அவன் நன்றியலைதல் என்ற தருமத்தை முற்றும் மறந்து போயினான்; அவன் நம்முன் செய்து கொண்ட நட்பு ஒருபுறம் இருக்கட்டும்; நமது வீரத்தையும், பேராற்றலையும் அறியவில்லையே? புதிதாக திரும்பக் கிடைத்த மனைவியுடனும், அரசுடனும் இனிதாக சுகபோகத்தில் திளைக்கிறான் போலும்!''

**சிறப்பு :** சுக்ரீவனின் இழிகுணம் சிறப்பாகக் கூறப்படுகின்றது. ஒழுக்கமான மேன்மையில் இருந்தும், செய்ந்நன்றியில் இருந்தும் அவன் நீங்கிவிட்டான் என்பதினூடாக இவ்விழிகுணம் எடுத்துக் காட்டப்படுகிறது.

## 03. இராமன் இலக்குமணனைக் கிட்கிந்தைக்குச் சென்றுவரப் பணித்தல்

''நன்றிகொன்று, அரு நட்போடு நார் அறுத்து
ஒன்றும் மெய்மை சிதைத்து, உரை பொய்த்துளார்
கொன்று நீக்குதல் குற்றத்தின் நீங்குமால்;
<u>சென்று மற்றுஅவன் சிந்தையைத் தேர்குவாய்''</u>

**பொருள :** ''நாம் செய்த உதவியை மறந்தான். நாம் நீட்டிய பெறுதற்கரிய நட்புக் கரத்தையும் அறுத்துவிட்டு எல்லோருக்கும் பொருந்துவதான வாய்மையையும் குலைத்து விட்டான். தான் சொன்ன சொல்லைக் காப்பாற்றாதும் தவிர்த்து விட்டான். எனவே இவ்வளவு குற்றங்களைச் செய்தவனைக் கொன்று தீர்த்தல் கூடக் குற்றத்தின் பாற்படாது. அதைச் செய்வதன் முன், நீ சென்று அவனது உள்ளக்கருத்தினை அறிந்து வருவாயாக!'' என்றான் இராமன்.

**சிறப்பு :** இராமனின் மேன்மைக்குணம் சிறப்பாக கூறப்படுகிறது. சுக்ரீவனை கொல்லுதல் கூட குற்றமாகாது எனக்கூறி, எனினும் அதைச்செய்வதற்கு முன் அவனது உள்ளக்கருத்தை அறிந்து வாவென தன் தம்பியை அனுப்பும் அவனது (ஆராய்ந்தறியும்) நற்பண்பு சிறப்பாகும்.

04. <u>வானரங்கள் வெருவி, மலைஒரீஇ</u>
<u>கான் ஒருங்குபடர,</u> அக்கார்வரை
மீன் நெருங்கிய வானகம் மீன்எலாம்
போனபின், பொலிவற்றது போன்றதே.

**பொருள** : இவ்வாறு குரங்குகள் இலக்குமணனின் வருகை கண்டு அஞ்சி, கிட்கிந்தை மலையை விட்டு நீங்கி, எல்லாம் ஒன்று சேர்ந்து காட்டுக்குள் சென்று ஒளிந்து கொண்டதால் அந்தக் கரியமேகம் போன்ற கிட்கிந்தை மலை, நட்சத்திரங்கள் நெருங்கியிருந்த ஆகாயம், அந்த நட்சத்திரங்கள் எல்லாம் மறைந்து போன பின், எப்படி அழகு அற்று விளங்குமோ, அவ்வாறு பொலிவற்று விளங்கியது.

**சிறப்பு** : இலக்குமணனின் சிறப்பு கூறப்படுகிறது. இலக்குமணனின் வருகையினால் குரங்கள் கிட்கிந்தை மலையைவிட்டு நீங்கி, எல்லாம் ஒன்று சேர்ந்து காட்டுக்குள் சென்று ஒளிந்து கொண்டன. விலங்குகள் கூட அவன் வருகையினால் பயம் அடைந்தன அல்லது மரியாதையின் நிமித்தம் ஒளிந்தனவெனலாம்.

### 05. இலக்குமணன் நகரத்தினுள் நுழைதல்

**அன்ன காலையின், <u>ஆண்தகை ஆளியும்,</u>**
**<u>பொன்னின் நல்நகர் வீதியில் புக்கனன</u>;**
**சொன்ன தாரையைச் சுற்றினர் நின்றவர்**
**''என்னசெய்வது? எய்தினன்'' என்றனர்.**

**பொருள** : அப்பொழுது, ஆண்களில் சிறந்தவனும் சிங்கம் போல்பவனுமான இலக்குமணன் அழகும் சிறப்பும் மிக்க கிட்கிந்தை நகரத்தின் வீதியில் நுழையலானான். முன்பு கடிந்துரைத்துக் கொண்டிருந்த தாரையைச் சுற்றி நின்ற வானரர்கள் இது கண்டு, ''இப்பொழுது இலக்குமணன் நகருக்குள் வந்துவிட்டானே. இனி நாம் என்ன செய்வது?'' என்று தாரையிடம் ஆலோசனை கேட்டனர்?

**சிறப்பு** : இலக்குமணனின் வீரமும், கிட்கிந்தை நகரின் அழகும் சிறப்பிக்கப்படுகின்றன. ஆண்களில் சிறந்தவனும் சிங்கம் போன்றவனும் என்று இலக்குமணன் சிறப்பிக்கப்படுகிறான். அழகும் சிறப்புமிக்க நல்நகராக கிட்கிந்தை சிறப்பிக்கப்படுகிறது.

### 06. அப்பொழுது அனுமான் ஓர் ஆலோசனை கூறல்

**''அனை! எதிரந்து இவண், ஆய்வளையாரோடும்**
**மனையின் வாயில் வழியினை மாற்றினால்,**
**<u>நினையும் வீரன் அந் நீள் நெறி நோக்கலானான்</u>;**
**சொன்ன தாரையைச் சுற்றினர் நின்றவர்**
**வினையும் ஈது'' என்று, அனுமன் விளம்பினான்.**

**பொருள** : அப்பொழுது அனுமன் தாரையை நோக்கி, ''அன்னையே! தாங்கள், ஆராய்ந்து தெரிந்து எடுக்கப்பட்ட வளையல்களை அணிந்த சில பெண்களுடன்,

அவன் வரும் வழியில் எதிரில் சென்று அரண்மனையின் வாயிலில் அவனைத் தடுத்துவிட்டால், சிந்தித்து முடிவெடுக்கும் இலக்குமணன் பெண்கள் நிற்கின்ற நீண்டவழியில் செல்லுவதை எண்ணமாட்டான். இப்போது நாம் செய்யக்கூடிய தந்திரம் இதுவேயாகும்'' என்றான்.

**சிறப்பு :** இலக்குமணனின் குணம் அல்லது நற்பண்பு சிறப்பிக்கப்படுகிறது. சிந்தித்து முடிவெடுக்கும் இலக்குமணன் என்றும், பெண்கள் நிற்கின்ற வழியில் அவன் செல்லமாட்டான் என்றும் கூறப்படுவதினூடாக இச்சிறப்பு கூறப்படுகிறது.

## 07. தாரை அவ்வாறே செய்தல்

''நீரெலாம் அயல் நீங்குமின்; நேர்ந்து, யான்
வீரன் உள்ளம் வினவுவல்'' என்றலும்,
பேர நின்றனர் யாவரும; பேர்கலாத்
தாரை சென்றனள் தாழ்குழலாரொடும்.

**பொருள :** தாரை, அங்கதன் முதலிய வானர வீரர்களை நோக்கி, ''சரி நீங்கெளெல்லாம் சற்று அப்பால் அகன்று செல்லுங்கள்; நான் இலக்குமணனிடம் சென்று, அவனது உள்ளக் கருத்தைக் கேட்டு அறிவேன்'' என்றாள்; உடனே எல்லோரும் சற்று ஒதுங்கி நின்றனர்; தனது உறுதியான கொள்கையிலிருந்து பின்வாங்காத பெருமையை உடைய தாரை, நீண்டு தாழ்ந்து தொங்குகின்ற கூந்தலை உடைய தன் தோழிப்பெண்களுடன், இலக்குமணனை நோக்கிச் சென்றாள்.

**சிறப்பு :** தாரையின் சிறப்புக் கூறப்படுகிறது. உறுதியான கொள்கையில் இருந்து பின்னடையாக அவளின் குணம் மற்றும் அவளுக்கு கருத்துக்கு மதிப்பளித்து எல்லோரும் விலகி நிற்றல் போன்றன இச்சிறப்புக்குக் காரணங்களாகும்.

## 08. தாரை இலக்குமணனைத் தடுப்பது போல் நிற்றல்

உரைசெய் வானவீரர் உவந்து உறை
அரசர்வீதி கடந்து, அகன்கோயிலைப்
புரசையானை அன்னான் புகலோடும், அவ்
விரைசெய் வார்குழல் தாரை, விலக்கினாள்.

**பொருள :** கழுத்திலிடும் கயிறுடைய யானையைப் போன்ற இலக்குமணன், எல்லோராலும் புகழ்ந்து சிறப்பித்துச் சொல்லப்படுகின்ற படைத் தலைவர்களான வானர வீரர்கள் மகிழ்ச்சியுடன் தங்கியிருக்கும் இராச வீதிகளைக் கடந்து சென்று, சுக்கிரீவன் வாழும் இடமகன்ற அரண்மனையுள் புகுகின்ற சமயத்தில், இயற்கை

யிலேயே நறுமணம் கமழும் நீண்ட கூந்தலையுடைய தாரை குறுக்கிட்டு, இலக்குமணனை வழிமறித்தாள்.

**சிறப்பு :** இலக்குமணன், தாரை ஆகியோரின் சிறப்புக்கள் கூறப்படுகின்றன. கழுத்திலிடும் கயிறுடைய யானையைப் போன்ற இலக்குமணன் என்று உவமை அணியுடன் இலக்குமணன் சிறப்பிக்கப்படுகிறான். இயற்கையிலேயே நறுமணம் மிக்க கூந்தலையுடையவள் என்று தாரை சிறப்பிக்கப்படுகிறாள்.

09. விலங்கி மெல்லியல், வெள்நகை, வெள்வளை,
இலங்கு நுண்ணிடை, ஏந்து இள மென் முலை,
குலம்கொள் தோகை மகளிர் குழாத்தினால்,
வலம்கொள் வீரன் வருவழி மாற்றினாள்.

**பொருள :** அவ்வாறு குறுக்கிட்டு, மென்மையான தன்மையும், வெள்ளிய பற்களையும், சங்குகளால் ஆகிய வெண்மையான வளையல்களையும், மின்னல் போல் ஒளிர்கின்ற நுட்பமான இடையையும், உயர்ச்சியும், இளமையும் கொண்ட மெல்லிய கொங்கை களையும், நற்குடியில் பிறந்த மயில்போலும் சாயலையும் உடைய வானமகளிரின் கூட்டத்தினால், வெற்றியும் மேன்மையும் பொருந்திய இலக்குமணன் வருகின்ற அந்த வீதியின் நீண்ட வழியைத் தாரை தடுத்தாள்.

**சிறப்பு :** வானமகளிர் கூட்டத்தின் அழகு சிறப்பிக்கப்படுகிறது. நற்குடியில் பிறந்த மயில் போன்ற சாயலையுடையவர்கள் என்று உவமை அணியினூடாக இவர்கள் சிறப்பிக்கப்படுகின்றனர்.

## 10. வானர மகளிர் குழுவின் தோற்றம்

வில்லும் வாளும் அணிதொறும் மின்னிட
மெல் அரிக்குரல் மேகலை ஆர்த்து எழ,
பல்வகைப் புருவக்கொடி பம்பிட
வல்லி ஆயம் வலத்தினில் வந்ததே.

**பொருள :** அம்மகளிர் அணிந்திருக்கின்ற ஆபரணங்கள், விற்படை போலவும், வாட்படைபோலவும் ஒளிவிட்டுப் பிரகாசிக்கவும், அவர்கள் காலில் அணிந்துள்ள சிலம்புகளின் உள்ளிருக்கும் பரல்கற்கள் ஒலிசெய்யவும், அவர்கள் இடையில் அணிந்திருக்கும் மேகலை ஒலி எழுப்பவும், புருவங்கள் கொடிகளாக செறிந்து விளங்கவும் மகளிரின் சேனைபோன்ற திரள் வந்து, இலக்குமணனைச் சுற்றிவளைத்துச சூழ்ந்து கொண்டது.

**சிறப்பு :** வானமகளிரின் புருவ அழகு சிறப்பிக்கப்படுகிறது. புருவக்கொடி என்பதினூடாக அவர்களின் புருவங்கள் கொடிகளுக்கு உருவகிக்கப்படுகின்றன.

### 11. இலக்குமணன் அவர்களைப் பார்க்க அஞ்சுதல்

**ஆர்க்கும் நூபுரங்கள் பேரி, அல்குலாம் தடந்தேர் சுற்ற,**
**வேற்கண் விற்புருவம் போர்ப்ப, மடந்தையர் மிடைந்த போது**
**பேர்க்க அரும் சீற்றம்பேர, முகம் பெயர்த்து ஒதுங்கிற்றல்லால்**
**பார்க்கவும் அஞ்சினான், அப்பருவரை அனைய தோளான்.**

**பொருள :** அவ்வாறு அவ்வானர மகளிர் கூட்டம், தங்கள் கால்களில் அணிந்திருக்கும சிலம்பின் ஒலி பேரிகைபோல் ஒலிக்கவும், அவர்கள் அல்குல் பெரிய தேர்களைப் போல் சூழ்ந்து கொள்ளவும் வேற்படையாகிய கண்களும், விற்படையாகிய புருவங்களும் அவனை வந்து மறைத்துக் கொள்ளவும், தன்னை நெருங்கி வந்தபோது, நீக்க முடியாத பெருங்கோபம் கொண்டு வந்த, பருத்த மலை போன்ற தோள்களை யுடையவனான இலக்குமணன், இப்பொழுது அக்கோபம் சற்றுத் தணியப் பெற்று, தன்முகத்தை வேறுபக்கம் திருப்பிக் கொண்டு, தன் பின்னால் நிற்கும் அம்மகளிரை ஏறெடுத்துப் பார்ப்பதற்குக் கூட அச்சமுற்று, உள்ளம் கூசி, ஒதுங்கி நின்றான்.

**சிறப்பு :** வானமகளிரின் அழகு உவமை, உருவக அணிகளினூடாக சிறப்பிக்கப்படுகிறது. சிலம்புகள் பேரிகைபோல் ஒலித்தல், அல்குல் பெரிய தேர்களைப் போல் சூழ்ந்து கொள்ளல் (உவமைகள்), வேற்படையாகிய கண்கள், விற்படையாகிய புருவங்கள் (உருவகங்கள்)

### 12. தாரை கூறத் தொடங்குதல்

**தாமரை வதனம் சாய்த்து தனு நெடுந் தரையிலன் ஊன்றி**
**மாமியர் குழுவில் வந்தானாம் என, மைந்தன் நிற்ப**
**பூமியில் அணங்கு அனார்தம் பொது விடைப்புகுந்து, பொன்தோள்**
**தூ மன நெடுங்கண் தாரை, நடுங்குவாள், இனைய சொன்னாள்.**

**பொருள :** இளையோனாகிய இலக்குமணன், தனது தாமரை போன்ற முகம் சற்றுத் தாழ, தலைகுனிந்து, தன்னுடைய பெரிய வில்லைத் தரையில் ஊன்ற வைத்து, மாமியர்கள் சூழ்ந்துள்ள கூட்டத்தில் வந்த புது மருமகனைப் போல் கூச்சமுற்று நின்றான். அப்பொழுது, அழகிய தோள்களை உடையவளும், தூய்மையான மாசற்ற உள்ளத்தை உடையவளும், நீண்ட கண்களையுடையவளுமான தாரை, மண்ணுலகில் வந்து தோன்றிய தேவமகளிர் போன்ற வானரப் பெண்கள்

கூட்டத்தின் இடையில் புகுந்து நின்று கொண்டு, சற்று நடுக்கத்துடன், கீழ்க் கண்டவற்றை கூறத் தொடங்கினாள்.

**சிறப்பு :** இலக்குமணனின் சுபாவம் உவமை மூலம் சிறப்பிக்கப்படுகிறது. வானமகளிர் கூட்டத்திற்கு நடுவே நிற்கும் அவன் நிலை மாமியர் சூழ்ந்துள்ள கூட்டத்தில் வந்த புது மருமகனின் நிலைக்கு ஒப்பிடப்பட்டுள்ளது.

## 13. தாரை இலக்குமணனைப் புகழ்ந்து பேசுதல்

**"அந்தம்இல் காலம் நோற்ற**
**ஆற்றல் உண்டாயின் அன்றி,**
**இந்திரன் முதலினோர்க்கும்**
**எய்தலாம் இயல்பிற்றாமோ?**
**மைந்த! நின்பாதம்கொண்டு,**
**என் மனை வரப்பெற்று வாழ்ந்தேம்;**
**உயந்தனம் வினையும் தீர்ந்தேம்;**
**உறுதி வேறு இதனின் உண்டோ?"**

**பொருள :** "வீரனே! அளவற்றகாலம் தவம்புரிந்தாலன்றி நீ உன் திருவடி நோக, எங்கள் மனைக்கு எழுந்தருளியிருப்பது சாத்தியமாகுமோ? நாங்கள் செய்த தவத்தின் பயனால் நீ வரப்பெற்றதால் இப்பிறப்பில் நல்வாழ்வும், மறுமையில் நற்கதியும் பெற்று, எங்கள் தீவினைகளெல்லாம் நீங்கப்பெற்றோம். இதனைக் காட்டிலும் எங்களுக்கு வேறு நன்மை கிடைக்கற்பாலதோ?" என்றாள் தாரை.

**சிறப்பு :** இலக்குமணனின் சிறப்பு கூறப்படுகிறது. இலக்குமணன் வருகையினால் மறுமை நற்கதியும், தீவினை நீங்குவதும், இதைவிடவும் வேறு நன்மை விளையாது என்கின்றதுமான தாரையின் கூற்றினூடாக இச்சிறப்பு வெளிப்படுகிறது.

**14. "வெய்தின் நீ வருதல் நோக்கி வெருவி நின் சேனைவீரர்**
**செய்திதான் உணர்கிலாது, "திருஉளம் தெரித்தி" என்றார்;**
**ஐய! நீ ஆழி வேந்தன் அடியினை பிரிகிலாதாய்,**
**எய்தியது என்னை? என்றாள். இசையினும் இனிய சொல்லாள்"**

**பொருள :** "வீரனே! நீ மிக்க சீற்றம் கொண்டு வருவதைக் கண்டு, உன்னுடைய வானர வீரர்கள் அச்சம் கொண்டுள்ளனர். நீ எதற்காக வந்திருக்கிறாய் என்பதை அவர்களால் அறிந்துகொள்ள முடியவில்லை. அவர்கள் என்னை அணுகி, இலக்கு மணனது உள்ளக் கருத்தை அறிந்து எங்களுக்குத் தெரிவியுங்கள்" என்று கூறினார்கள். எனவே! மைந்தனே! நீ எப்பொழுதும் ஆணைச் சக்கரத்தை உடைய

இராமபிரானின் திருவடிகளை விட்டு இமைப்பொழுதும் பிரியாத இயல்புடைய வனாயிற்றே? இப்பொழுது அவனைப் பிரிந்து, நீ மட்டும் தனியாக இங்கு வந்திருப்பதன் காரணம் என்ன? என்று கேட்டாள். இசைப்பாட்டை விட இனிமையான சொற்களைப் பேசும் தாரை.

**சிறப்பு :** இராமனின் சிறப்பும், இலக்குமணன் இராமன் மீது கொண்ட அன்பும் சிறப்பிக்கப்படுகிறது. இராமன் ஆணைச் சக்கரத்தை உடையவன் என சிறப்பிக்கப்படுவதோடு, இராமனின் பாதங்களை எப்போதும் பிரியாதவன் என்பதினூடாக இலக்குமணனின் அன்புணர்வும் எடுத்துக்காட்டப்படுகிறது.

## 15. இலக்குமணன் தாரையை நோக்குதல்

"ஆர்கொலோ உரைசெய்தார்?"
என்று அருள்வர, சீற்றம் அஃக
பார்குலாம் முழு வெண் திங்கள்,
பகல்வந்த படிவம் போலும்,
ஏர்குலாம் முகத்தினாளை,
இறைமுகம் எடுத்து நோக்கி,
தார்குலாம் அலங்கல் மார்பன்,
தாயரை நினைந்து நைந்தான்.

**பொருள :** மலர்மாலைகள் அசைந்தாடி ஒளிவீசும் மார்பினை உடையவனான இலக்குமணன், "இத்தகைய இனிய சொற்களைச் சொன்னவர் யார்?" என்று பார்க்க வேண்டித் தன் முகத்தைச் சிறிது உயர்த்திப் பார்த்தான். அந்த அளவில் அவன் கோபம் தணிந்தது. அருள் வெளிப்பட்டது. காரணம் அங்கே நின்றது, ஒரு களங்கமும் அற்ற முழு வெண்மதி, நிலத்தில் அதுவும் பகலில் தோன்றினால் எப்படி ஒளி குறைந்து தோன்றுமோ, அதுபோல ஒளி மழுங்கிய முகத்துடன் வாலியின் மனைவியான தாரை, விதவைக் கோலத்தில் தோன்றினாள். அதைக் கண்டதும், இலக்குமணன் தன் தாயாராகிய சுமித்திரை, கோசலை முதலியோரும் இவ்வாறு தானே கைம்மைக் கோலத்தில் இருப்பார்கள் என்று எண்ணித் தன் மனம் மிகவும் வருந்தினான்.

**சிறப்பு :** தாரையின் விதவைக் கோலம் உவமையினூடாக சிறப்பிக்கப்படுகிறது. களங்கமற்ற நிலவு பகலில் ஒளி குறைந்து தோன்றும் தோற்றமானது தாரையின் முகத்திற்கு உவமிக்கப்பட்டுள்ளது.

### 16. தாரையை நோக்கிய இலக்குமணன் நிலை

<u>மங்கல அணியை நீக்கி, மணிஅணிதுறந்து, வாசக்</u>
<u>கொங்குஅலர்கோதை மாற்றி,</u> குங்குமம் சாந்தம் கொட்டாப்
பொங்கு வெம்முலைகள், பூசக்கழுத்தொடு மறையப் போர்த்த,
நங்கையைக் கண்ட வள்ளல், நயனங்கள் பனிப்ப நின்றான்.

**பொருள :** தன்னுடைய மங்கல நாணையும் நீக்கிவிட்டு, இரத்தினங்கள் பதித்துச் செய்யப்பெற்ற மற்ற அணிகலன்களையும் தவிர்த்து, நறுமணம் பொருந்தியதும், தேன் பெருகுவதுமான மலர்மாலைகளையும் அணியாது விடுத்து, குங்குமம், சந்தனம் ஆகிய கலவைகளைத் தன்மார்பில் பூசிக்கொள்ளாது, பருத்த, வெம்மை யுடைய கொங்கைகளைத் தன் பாக்குமரம் போன்ற கழுத்தோடு சேர்த்துத் தன் மேலாடையால் மூடிக்கொண்டு தன் எதிரில் வந்துநின்ற தாரையை, கருணை மிகுந்தவனான இலக்குமணன் கண்டதும், தாரையின் நிலையை எண்ணியும், தன் தாயாரின் நிலையை எண்ணியும் தன் கண்கள் கண்ணீர் சிந்த கலங்கி நின்றான்.

**சிறப்பு :** தாரையின் கைம்மைக் கோலம் சிறப்பிக்கப்படுகிறது. மங்கல நாண், மற்றும் இரத்தினங்கள் பதித்த அணிகலன்கள், தேன் பெருகுகின்ற மலர்மாலைகள் போன்றவற்றை அவள் துறந்திருப்பதினூடாக இச்சிறப்பு எடுத்துக் காட்டப்படுகிறது.

**03. இராமன் இலக்குமணனிடம் சுக்கிரீவன் குறித்து ஆவேசப்பட்டு முறையிடு பவற்றை எழுதுக.**

- நாம் கூறிய கார்கால எல்லையாகிய நான்கு மாதங்கள் கழிந்தும் வராது, அதற்கு மேலும் காலம் தாழ்த்திக் கொண்டிருக்கிறானே இந்த மன்னனான சுக்ரீவன்? இவன் என்ன செய்கிறான்?
- யாவராலும் எளிதில் பெறுவதற்கு அரிய அரச செல்வத்தையும், இழந்த மனைவியையும், நம் உதவியால் பெற்ற பெரிய தகுதியை நினைவிற் கொள்ளாமல் மறந்து விட்டான் போலும். அவன் தனது நல்லொழுக்கமான மேன்மையிலிருந்து நீங்கிவிட்டான். அவன் செய்து கொண்ட நட்பு ஒரு புறம் இருக்கட்டும். நமது வீரத்தையும் பேராற்றலையும் அறியவில்லையே? புதிதாக திரும்பக் கிடைத்த மனைவியுடனும் அரசுடனும் இனிதாக சுகபோகத்தில் திளைக்கிறான் போலும்.
- நாம் செய்த உதவியை மறந்தான். நாம் நீட்டிய பெறுதற்கரிய நட்புக் கரத்தையும் அறுத்து விட்டு எல்லோருக்கும் பொருந்து

வதான வாய்மையையும் குலைத்துவிட்டான். தான் சொன்ன சொல்லைக் காப்பாற்றாது தவிர்த்து விட்டான். எனவே இவ்வளவு குற்றங்கள் செய்தவனைக் கொன்று தீர்த்தல் கூட குற்றத்தின் பாற்படாது.

**09. இலக்குமணனைத் தடுத்து நிறுத்த அனுமன் தாரையிடம் கூறிய உபாயம் என்ன?**

- "அன்னையே! தாங்கள் ஆராய்ந்து தெரிந்து எடுக்கப்பட்ட வளையல் களை அணிந்த சில பெண்களுடன், இலக்குமணன் வரும் வழியில் எதிரில் சென்று அரண்மனையின் வாயிலில் அவனைத் தடுத்து விட்டால், சிந்தித்து முடிவெடுக்கும் இலக்குமணன் பெண்கள் நிற்கின்ற நீண்டவழியில் செல்லுவதை எண்ணமாட்டான" என்பதாகும்.

**10. தாரை, மகளிர் குழாம் சூழ வந்து இலக்குமணனை வழிமறிக்கும் காட்சியை விபரிக்குமாற்றிலுள்ள சிறப்புக்களை விளக்குக.**

- இயற்கை அழகுடைய தாரையும், வானமகளிர் கூட்டமும் தங்கள் உடலழகைக் காட்டி இலக்குமணனை வழிமறிக்கின்றனர். (மென்மையான தன்மை, வெண்மையான பற்கள், மின்னல் போல ஒளிர்கின்ற நுட்பமான இடை, உயர்ச்சியும் இளமையும் கொண்ட மெல்லிய கொங்கை, மயில்போன்ற சாயல்) இதன் மூலம் இலக்கு மணன் கூச்சப்பட்டு ஒதுங்கிவிடுவான் என்ற உத்தி கையாளப் படுவது சிறப்பாகும்.
- வானமகளிர் அணிந்திருக்கின்ற ஆபரணங்கள், விற்படை, வாட் படை போல ஒளிவிட்டுப் பிரகாசிக்க, அவர்கள் காலில் அணிந்துள்ள சிலம்புகளின் உள்ளிருக்கும் பரல்கற்கள் ஒலிசெய்யவும், அவர்கள் இடையில் அணிந்துள்ள மேகலை முரசம் போல ஒலியெழுப்பவும், பல்வகைப்பட்ட கொடிகள் போல அவர்கள் புருவம் விளங்கவும் இலக்குமணனைச் சுற்றி வளைத்தனர். இவை ஓர் போர்க்களக் காட்சியை கண்முன்னே கொண்டு வருவது போல அமைக்கப் பட்டு இலக்குமணனைச் செல்லவிடாது தடுக்கும் உத்தியாக கூறப்படுவது சிறப்பானதாகும்.
- வானமகளிரின் அல்குல் தேர்களைப் போல சூழ்ந்து கொள்வதாகவும், வேற்படையாகிய கண்களும், விற்படையாகிய புருவங்களும்

இலக்குமணனை மறைத்துக்கொள்வதாகவும் கூறப்படுகிறது. இதன் மூலம் அவன் முகத்தை வேறுபக்கம் திருப்பி, அவ்வழிச் செல்ல அச்சமுற்று, கூசி, ஒதுங்கி நிற்பான் என்ற உத்தி சிறப்பாக கையாளப்பட்டுள்ளது.

- உவமை, உருவக அணிப்பயன்பாடும் சிறப்பாகக் கையாளப் பட்டுள்ளன.

**11. 'தாமரை வதனம் சாய்த்து, தனு நெடுந் தரையின் ஊன்றி' என்ப வற்றினூடாக வெளிப்படும் சிறப்பு யாது?**

- இலக்குமணனின் கூச்ச சுபாவம், உவமையோடு கூடிய சொல்லாட் சியின் மூலம் எடுத்துக்காட்டப்படுகிறது.
  தாமரை போன்ற முகம் (உவமை) சாய்ந்து,
  வில்லைத் தரையில் ஊன்ற வைத்து நிற்கிறான் (கூச்ச சுபாவம்)

**12. 'தார் குலாம் அலங்கல் மார்பன்' என்பதினூடாக கவிஞர் கூற வருவது என்ன?**

- இலக்குமணனின் தோற்றப் பொலிவின் சிறப்பு கூறப்படுகிறது.

**13. "உரை பொய்த்துளார்க் கொன்று நீக்குதல் குற்றத்தின் நீங்குமால்" இக்கூற்று யாரால், யாருக்கு, எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது?**

- இராமனால், இலக்குமணனுக்கு, இலக்குமணனை கிட்கிந்தை சென்று வரப்பணித்து, சுக்ரீவன் நமது உதவியையும், நட்பையும் மறந்து, வாய்மையையும் குலைத்துவிட்டான் என்று கூறிய சந்தர்ப்பத்தில்

**14. "நினையும் வீரன் அந் நீள் நெறி நோக்கலான் வினையம் ஈது" இக்கூற்று யாரால், யாருக்கு, எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது?**

- அனுமனால், தாரைக்கு, இலக்குமணன் நகருக்குள் வந்துவிட்டான். இனியென்ற செய்வது என்று வானரர்கள் தாரையிடம் ஆலோசனை கேட்டபோது தாரையை நோக்கி அனுமன் கூறியது.

**15. "நீரெலாம் அயல் நீங்குமின் நேர்ந்து, யான் வீரன் உள்ளம் வினவுவல்" இக்கூற்று யாரால், யாருக்கு, எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது?**

- தாரையால், அங்கதன் முதலிய வானர வீரர்களுக்கு, அனுமனின் ஆலோசனையைக் கேட்டுப் பின் தாரை கூறியது.

**16. "மைந்த நின்பாதம் கொண்டு, எம்மனை வரப்பெற்று வாழ்ந்தேம்" இக்கூற்று யாரால், யாருக்கு, எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது?**

- தாரையால், இலக்குமணனுக்கு, கூச்சமுற்று நின்ற இலக்குமணனைப் புகழ்ந்து தாரை கூறியது.

**17. இராமனின் சிறப்புக்களாக இப்பகுதியில் கூறப்படுபவை யாவை?**

- மூத்தவன், வீரன், சிங்கம் போன்றவன்
- ஆணைச்சக்கரத்தை உடையவன்

**18. இலக்குமணனின் சிறப்புக்களாக இங்கு கூறப்படுபவை யாவை?**

- வலிமையானவன்
- ஆண்களில் சிறந்தவன், சிங்கம் போன்றவன்
- சிந்தித்து முடிவெடுப்பவன்
- கழுத்திலிடும் கயிறுடைய யானையைப் போன்றவன்
- வெற்றியும் மேன்மையும் பொருந்தியவன்
- பருத்த மலைகளைப் போன்ற தோள்களையுடையவன்
- நல்வாழ்வும், மறுமையில் நற்கதியும் பெற்றுத்தந்து தீவினை அறுக்கக் கூடியவன்
- தாமரை போன்ற முகத்தையுடையவன்
- இராம பிரானை விட்டு எப்பொழுதும் நீங்காதவன்
- மலர்மாலைகள் அசைந்தாடி ஒளிவீசும் மார்பினை உடையவன்
- கருணை மிகுந்தவன்

**19. தாரை என்பவள் யாவள்**

- வாலியின் மனைவி

**20. தாரையின் சிறப்புக்களாகக் கூறப்படுபவை யாவை?**

- தன் உறுதியான கொள்கையில் இருந்து பின்வாங்காதவள்
- நீண்டு தாழ்ந்து தொங்குகின்ற கூந்தலை உடையவள்
- இயற்கையிலேயே நறுமணம் கமழும் கூந்தலையுடையவள்
- அழகிய தோள்களும், தூய்மையான மாசற்ற உள்ளமும், நீண்ட கண்களுமுடையவள்
- இசைப்பாட்டை விட இனிமையான சொற்களைப் பேசுபவள்
- களங்கமற்ற முழு வெண்மதி போன்றவள்

**21. தாரை கைம்மை நிலையடைவதற்கு காரணமாகயிருந்தவர் யார்?**

- இராமன்

**22. கைம்மை மகளிர் எவற்றை விட்டொழிப்பர் என்று கூறப்படுகின்றது?**

- மங்கல நாணை நீக்குதல்
- அணிகலண்களைத் தவிர்த்தல்
- மலர் மாலைகளை அணியாது விடுத்தல்
- குங்குமம், சந்தனம் போன்றவற்றை பூசாது விடுத்தல்

**23. இறுதியில் இலக்குமணன் மனம் இளகியதற்கான காரணம் என்ன?**

- தாரையின் கைம்மை நிலையை கண்டு தன் தாயர்களும் இப்படித் தான் இருப்பார்களோ என்று எண்ணி மனம் இளகினான்.

**24. கிட்கிந்தைப் படலத்தில் இடம்பெறும் உவமை அணிகளுக்கு எடுத்துக் காட்டுக்கள் தருக.**

- கரியமேகம் போன்ற கிட்கிந்தை மலை
- சிங்கம் போன்ற இராமன்
- கழுத்திலிடும் கயிறுடைய யானை போன்ற இலக்குமணன்
- பருத்த மலைபோன்ற தோள்
- தாமரை போன்ற முகம்
- மாமியர்கள் சூழ்ந்த கூட்டத்தில் நிற்கும் புது மருமகன் போல் கூச்சமுற்ற இலக்குமணன்
- களங்கமற்ற முழு வெண்மதி பகலில் தோன்றும் வடிவம் போன்ற அழகுடை முகத்தினாள்.

# 07. விவேக சிந்தாமணி

**01. விவேக சிந்தாமணி எக்காலத்திற்குரிய இலக்கியம் என நம்பப்படுகிறது? இந்நூல் எவ்வகை இலக்கியம்?**

- நாயக்கர் காலத்திற்குரிய இலக்கியம் என நம்பப்படுகிறது.
- சிற்றிலக்கியம்

**02. விவேக சிந்தாமணியின் உள்ளடக்கங்கள் யாவை?**

- நீதிக் கருத்துக்கள், சிருங்காரச் சுவை நிரம்பிய பாடல்கள்

**03. விவேக சிந்தாமணியை இயற்றியவர் யார்?**

- யாரென்பது அறியப்படவில்லை

**வந்தது வான்உறு மதியமோ?**

தேன்நுகர் வண்டு மதுதனை உண்டு
தியங்கியே கிடந்ததைக் கண்டு
தான்அதைச் சம்பு வின்கனி என்று
தடங்கையில் எடுத்துமுன் பார்த்தாள்
வான்உறு மதியம் வந்ததுஎன்று எண்ணி
மலர்க்கரம் குவியுமென்று அஞ்சிப்
போனது வண்டோ பழந்தான்
புதுமையோ இது எனப் புகன்றாள்.

**04. இப்பாடலின் பொருளைத் தருக.**

- தேனை உண்ணும் இயல்புடைய வண்டுகள் மலர்களில் உள்ள தேனையுண்டு மயங்கிக் கிடந்தன. அவற்றைக் கண்டாள் ஒரு பெண். அவற்றை நாவல் பழங்கள் என நினைத்து அவற்றுள் ஒன்றைத் தன் பெரிய கையில் எடுத்துப் பார்த்தாள். அப்போது அந்த வண்டு அவளது முக அழகால் வானத்தில் உலாவும் சந்திரன் வந்தது என எண்ணி, (அவளது) கையான தாமரை மலர் குவிந்து விடும் என அஞ்சிப் பறந்து போய்விட்டது. அவள் பறந்துபோன வண்டோ, அன்றிப் பழமோ வேறு என்ன புதுமையோ எனச் சொன்னாள்.

05. கவிஞனின் கற்பனையாற்றலை எடுத்துக்காட்டுக்களுடன் விளக்குக.

- தேனையுண்டு மயங்கிக் கிடக்கும் வண்டினை பெண் நாவல் பழம் என நினைக்கிறாள்.
- வண்டு அவளது முக அழகைக் கண்டு அம்முகம், வானத்தில் உலவும் சந்திரனோ என எண்ணுகிறது. இதன் மூலம் அப் பெண்ணின் அழகு கற்பனை நயத்தோடு காட்டப்படுகிறது.
- அவளது கையை வண்டானது தாமரை மலரோ என நினைத்து, அது குவிந்துவிடும் என அஞ்சிப் பறக்கிறது. இரவில் தாமரை மலர்கள் சந்திரனைக் கண்டு குவிவது வழக்கம். அதனால் அவள் முகத்தைக் கண்டு சந்திரன் என எண்ணியும், இரவு வந்துவிட்டதால் அவளது கரங்களை குவிகின்ற தாமரை மலராகக் கருதியும் வண்டு பறப்பது கற்பனை நயம் மிக்கது.
- பறந்தது வண்டோ, பழமோ, வேறு புதுமையோ என பெண் மயங்குவதும் கவிஞரது கற்பனையின் உச்சமாகும்.

06. இச்செய்யுளில் இடம்பெறும் உவமை அணியை எடுத்துக் காட்டுக.

- மலர்க்கரம் என்று கூறப்படுவது உவமையாகும். இங்கு கரம் தாமரை மலருக்கு உவமிக்கப்பட்டிருக்கிறது.
  பெண்ணினுடைய கைகள் குவிவதை, வண்டானது தாமரை மலர் குவிவது போல நினைத்து (மாலையானால் தாமரை குவிவது வழக்கம்) அஞ்சிப் பறந்து போகிறது. இங்கு கரத்திற்கு குவிகின்ற தாமரை மலரை ஒப்பிட்டிருப்பது சிறப்பாகும்.

## கண்டது கெண்டையோ?

தண்டு உலாவிய தாமரைப் பொய்கையில்
மொண்டு நீரை முகத்தரு ஏந்தினாள்
'கெண்டை' 'கெண்டை' யெ னக்கரை ஏறினாள்
கெண்டை காண்கிலள் நின்று தயங்கினாள்

07. இப்பாடலின் பொருளைத் தருக.

- ஒருத்தி கொடிகளையுடைய தாமரைப் பொய்கையில் உள்ள தண்ணீரைக் கையால் முகந்து தன் முகத்தருகே ஏந்திப் பார்த்தாள். அதில் தெரிந்த தன் நிழலைப் பார்த்து, 'கெண்டை மீன், கெண்டை மீன்!' எனக் கூவிக்கொண்டே (நீரைக் கீழே விட்டுத்) தரையில்

ஏறிப் பார்த்தபோது அக்கெண்டை மீனைக் காணாமல் நின்று மயங்கினாள்.

**08. நீரில் தலைவி கண்ட காட்சி யாது?**

- நீரில் தெரிந்த நிழலான தன்னுடைய கண்

**09. கண்களின் அழகினை கவிஞர் விபரிக்குமாற்றிலுள் நயத்தினை விளக்குக.**

- பண்டைய இலக்கியங்களில் பெண்களின் கண்களை கெண்டை மீனுக்கு ஒப்பிடுவது வழக்கமாகும். இதனை மனங் கொண்ட புலவர் பெண்ணின் கண்ணழகினை சிறப்பித்துச் சொல்ல சிறந்த தொரு கற்பனையை கையாண்டுள்ளார். முகத்தருகே அள்ளி ஏந்திய தண்ணீரில் தன் கண்களின் நிழலைக் காண்கிறாள் ஒருத்தி. அந்நிழல் கெண்டை மீன் போல காட்சிதர, 'கெண்டை மீன், கெண்டை மீன்!' எனக் கூவுவதும், பின் மீனைக் காணாமல் அவள் மயங்குவதாகச் சொல்வதும் நயக்கத்தக்கது.

**கலகமே செய்யும் கண் இதுவாம்**

அலகு வாள்விழி ஆயிழை நன்னுதல்
திலகம் கண்டுஎதிர் செஞ்சிலை மாரனும்
கலக மேசெயும் கண்இது வாம்என
மலரம்பு ஐந்தையும் வைத்து வணங்கினான்.

**10. இப்பாடலின் பொருளைத் தருக.**

- வாள்போன்ற கண்களையுடைய கன்னிப்பெண்ணின் நல்ல நெற்றியில உள்ள பொட்டினது அழகைக் கரும்பு வில்லையுடைய மன்மதன் பார்த்தான். இவளுடைய கண் கலகம் விளைவிப்பதோ என்று எண்ணித் தன் கையில் உள்ள மலர் அம்புகள் ஐந்தையும் அவள் முன் வைத்து வணங்கினான்.

**11. இப்பாடலில் இடம்பெறும் உவமை அணியை இனங்காண்க.**

- வாள்விழி என்பது உவமை அணியாகும்.
  விழிகள் வாளுக்கு ஒப்பிடப்பட்டுள்ளது.
  உவமானம் - வாள்

உவமேயம் - கண்

பொதுத்தன்மை - கூர்மை

12. மலர் அம்பு ஐந்தையும் வைத்து வணங்கினான் என்ற அடிகளின் பொருத்தப்பாட்டினை விளக்குக.

- மன்மதன் தன்னிடமுள்ள மலரம்புகள் ஐந்தையும் விட அவளது கலகம் விளைவிக்கும் கண்கள் அழகில் சிறப்புப் பெற்றிருக்கிறது என்ற காரணத்தினால் அதனை அதன் முன் வைத்து வணங்கினான். (தன் மலரம்புகள் அவளின் கண்களின் முன்னே தோற்றுவிடும் என்று கருதி, அதனை அவள் முன் வைத்து சரணாகதியடைந்தான்)

13. மலர் அம்புகள் ஐந்தும் யாவை?

- தாமரை, அசோகம், மா, முல்லை, குவளை

14. ஒத்த பொருள் தருக.

- ஆயிழை - ஆராய்ந்தெடுத்த ஆபரணங்களை அணிந்தவள்
  நுதல் - நெற்றி
  திலகம் - பொட்டு
  செஞ்சிலை - கரும்பு வில்
  மாரன் - மன்மதன்

15. விவேக சிந்தாமணிப் பாடல்களின் எடுத்துரைப்பு முறையிலுள்ள சிறப்புக்களைத் தருக.

- சிறந்த கற்பனை நயம் கலந்த சொல்லாட்சி
- எதுகை, மோனை அணிகளின் பயன்பாடு
- உவமை, உருவக அணிகள்
- சிறந்த ஓசைநயம்
- நாகரிகமான விபரிப்பு முறைமை

# 08. உரிமையும் கடமையும்

01. உரிமையும் கடமையும் என்ற கட்டுரையை எழுதியவர் யார்? இவர் எங்கு பிறந்தார்? இவரது காலம் யாது?
- டாக்டர். மு. வரதராசன்
- தமிழகம் திருப்பத்தூர் , 1912- 1974

02. டாக்டர். மு. வரதராசன் பெற்ற பட்டங்கள் யாவை?
- தமிழகத்தில் முதல்முதலாக கலாநிதிப்பட்டம்
- அமெரிக்க பல்கலைக்கழகம் ஒன்றில் டி.லிட் சிறப்புப்பட்டம்

03. டாக்டர். மு. வதராசன் வகித்த பதவிகள் யாவை?
- ஆசிரியர், விரிவுரையாளர், துணைவேந்தர்

04. டாக்டர். மு. வரதராசன் இலக்கியத்தின் எத்துறைகள் சார்ந்து இயங்கினார்?
- நாவல், சிறுகதை, நாடகம், வாழ்க்கை வரலாறு முதலிய துறைகள (85 நூல்கள்)

05. உரிமையும் கடமையும் கட்டுரையின் மையக் கருத்து யாது?
- மனித வாழ்க்கைக்குத் தேவையான தனிமனிதப் பங்களிப்பான உரிமை, கடமை, அன்பு, சமத்துவம் என்பவற்றின் முக்கியத்துவம

06. நாம் இந்த உலகில் வாழ்வதற்கு தேவையான அடிப்படை யாது? அவ்வடிப்படையின் முக்கியத்துவம் ஒன்று தருக.
- உரிமை
- உரிமை இல்லாத வாழ்வு உயிரற்ற வாழ்வு

07. உரிமை பெற்று வாழ வேண்டுமானால் அதற்காக நாம் உலகிற்கு செலுத்த வேண்டிய வரி யாது?
- கடமை

08. தந்தையின் கடமைகள், மகனின் உரிமைகள் பற்றி கட்டுரையாசிரியரின கருத்து யாது?

- தந்தைக்கிருக்கும் கடமைகள் - பொருள் வருவாய்க்கு உழைத்தல், குடும்பத்தை காப்பாற்றுதல்
- மகனுக்கிருக்கும் உரிமைகள் - தன் பெற்றோருக்கு கட்டுப்பட்டு ஒழுங்காக நடத்தல், ஆசிரியருக்கு கட்டுப்பட்டு ஒழுங்காகப் படித்தல்

**09. அலுவலகத்தில் / தொழிற்சாலைகளில் வேலை செய்வோருக்கு உள்ள உரிமைகள், கடமைகள் யாவை?**

- உரிமைகள் - ஊதியம் பெறுதல், விடுமுறை பெறுதல், மருத்துவ உதவி பெறுதல்
- கடமைகள் - நேரத்துடன் சென்று குறிப்பிட்ட வேலைகளை ஒழுங்காகச் செய்தல்

**10. "உரிமையும் கடமையும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள்" என்ற தொடரினூடாக ஆசிரியர் வலியுறுத்தும் கருத்துக்களைக் குறிப்பிடுக.**

- உரிமையை மட்டும் மிகுதியாக விரும்பி கடமையை புறக்கணித்தால குழப்பம்தான் மிஞ்சும். உள்ள உரிமையும் நிலைக்காது. இந்த உலக சீர்கேடுகளுக்கும் குழப்பங்களுக்கும் இதுவே காரணம். எனவே உரிமையையும் கடமையையும் நாணயத்தின் இரு பக்கங்கள் போல சமமாகக் கருத வேண்டும்.

**11. உரிமை, கடமை பற்றி உணராவிட்டால் ஏற்படும் விபரீதங்கள் யாவை?**

- குடும்பப் போராட்டம், நாட்டுக்கலகம், உலகப் போர் போன்றவை உண்டாகும்.

**12. உரிமைக்கும் கடமைக்கும் இடையே உள்ள ஏற்றத்தாழ்வை நீக்க கட்டுரையாசிரியர் கூறும் உபாயம் என்ன?**

- அன்பை வளர்க்க வேண்டும்

**13. கட்டுரையில் இடம்பெறும் அன்பு பற்றிய திருவள்ளுவரின் கருத்துக்கள் யாவை?**

- அன்பின் வலியது உயிர்நிலை
- அன்பு இல்லாத வாழ்க்கை பாலை நிலத்தில் உள்ள பட்டமரம் போன்றது.

14. இல்லறம் என்பதற்கு கட்டுரையாசிரியர் தரும் விளக்கம் என்ன?
- முன்னோர்கள் இல் வாழ்க்கையை ஓர் அறம் என்று சிறப்பித்தார்கள். அதுவே இல்லறம் என்றார்கள்.

15. இல்லறத்தின் அங்கங்கள் என்று கூறப்படுபவை யாவை?
- மக்கட்பேறு, சுற்றம் தழுவுதல்

16. தேசபக்தி, கடவுள் நெறி என்பவை ஏற்படுத்தப்பட்ட நோக்கங்கள் பற்றி கட்டுரையாசிரியர் குறிப்பிடுவன யாவை?
- தேசபக்தி - நாடு என்ற பெரிய குடும்பத்தை போற்றி வளர்ப்பதற்கு ஏற்படுத்தப்பட்டதாகும்.
- கடவுள் நெறி - உலகத்தில் வாழும் எல்லோரிடமும் அன்பு செலுத்தி, உலகத்தை கடவுளின் குடும்பம் என்று கருதும் பரந்த நோக்கத்திற்காக ஏற்படுத்தப்பட்டதாகும்.

17. தன்னலமாக வாழ்ந்தால் ஏற்படும் தீங்குகள் யாவை?
- அன்பு வரண்டு போகும், உரிமைக்கும் கடமைக்கும் போராட்டம ஏற்படும்.

18. ஆட்சி தொடர்பாக பழங்கால சமுதாயத்திலும் இக்கால சமுதாயத்திலும நிகழ்ந்திருக்கின்ற மாற்றங்கள் யாவை?
- பழங்காலத்தில் ஆள்வோரும் ஆளப்படுவோரும் வெவ்வேறாக இருந்தார்கள். இக்காலத்தில் எல்லோரும் இந்நாட்டு மன்னர் என்ற நிலைமை உள்ளது. ஆளப்பிறந்தவர்கள் என்று யாரும் இல்லை.

19. எதிர்காலத்தில் வேலைக்காரர், வேலை குறித்த கட்டுரையாசிரியர் பார்வைகள் யாவை?
- எதிர்காலத்தில் வேலைக்காரர் என்று ஒருசாரார் இருக்கமாட்டார்கள
- எல்லோரும் ஒவ்வொரு வேலைசெய்து பழக வேண்டியேற்படும்
- வேலைகளில் உயர்ந்த வேலை, தாழ்ந்த வேலை என்பன போய்விடும்
- வியர்வை வராத வேலைக்கு மதிப்பும், வியர்வை விடும் வேலைக்கு மதிப்புக் குறைவும் உள்ள நிலமை மாறிவிடும்.

20. ''சிறு சிறு வேலைகளையும் நாமே செய்து பழகுவது நல்லது''

**இக்கூற்றுக்கு கட்டுரையாசிரியர் தரும் பொருத்தமான உதாரணங்கள் எவை?**

- காரில் போகும் வசதி உடையவர்கள் காரைத் தூசு துடைக்கவும் கற்றுக்கொள்ள முன்வர வேண்டும். சைக்கிளில் போகின்றவர்களும் அதைத் துடைக்கவும், பழுது பார்க்கவும் கற்றுக்கொள்ள வேண்டும்.

**21. உரிமை, கடமை, அன்பு இவற்றிற்கிடையிலான தொடர்பினைக் கட்டுரையை ஆதாரமாகக் கொண்டு விளக்குக.**

- நாம் வாழ்வதற்குத் தேவையானது உரிமையாகும். உரிமையானது உயிரைப் போல முக்கியமுடையதாகும். நாம் உரிமை பெற்று வாழ உலகிற்கு செலுத்த வேண்டிய வரியே கடமையாகும்.
- உரிமையும் கடமையும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களைப் போன்றவை. உரிமையை விரும்பி கடமையைப் புறக்கணிக்கக் கூடாது. புறக்கணித்தால் குழப்பம் எஞ்சும். உரிமை நிலைக்காது.
- உரிமையைப் போலவே கடமையைப் போற்ற வேண்டும். இயலுமானால் உரிமையை விட பெரிதாக கடமையைப் போற்றுதல் நன்று.
- உரிமைக்கும் கடமைக்கும் இடையே உள்ள ஏற்றத்தாழ்வை நீக்க இயற்கை அமைத்த பாதுகாப்பே அன்பாகும்.
- அன்பு உயர்ந்தால் உரிமைப் போராட்டம் இல்லை.
- அன்பைத் தவறாகப் பயன்படுத்தக் கூடாது. அன்பு வரண்டு போனால் உரிமைக்கும் கடமைக்கும் போராட்டம ஏற்படும்.
- அவரவர் பெறும் உரிமைக்கு வரியாக அவரவருக்கு வாய்க்கும் கடமைகளை மதித்துச் செய்ய வேண்டும்.

**22. மனித சமத்துவம் பற்றிய ஆசிரியரின் நோக்கு யாது?**

- மனிதருக்கு மனிதர் எந்த வகையான வேறுபாடும் கருதக்கூடாது.
- ஏழை என்றும் தாழ்ந்தவர் என்றும் எவரும் இல்லை என்றார் பாரதி
- மனித சமத்துவம் எல்லா அறிஞர்களாலும் ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மையாகும்.
- சாதி, மதம், நிறம் முதலான எந்தக் காரணம் பற்றியும் வேறுபாடு செய்யாத நிலையை நோக்கி உலகம் நடக்கிறது.

● மனிதர்களிடையே வேறுபாட்டை வளர்க்கும் எதுவும் எதிர் காலத்தில் வாழ முடியாது.

23. **இக்கட்டுரை ஆசிரியர் குறிப்பிடும் இரு இலக்கியவாதிகளையும் அவர்களின் கருத்துக்களையும் தருக.**

● திருவள்ளுவர்
  - அன்பின் வழியது உயிர்நிலை
  - அன்பில்லாத வாழ்க்கை பாலை நிலத்தில் உள்ள பட்டமரம் போன்றது

● பாரதியார்
  - ஏழை என்றும் அடிமை என்றும் எவரும் இல்லை

24. **கட்டுரை ஆசிரியர் தான் கூறவிழைந்த விடயங்களை வலியுறுத்தக் கையாண்ட உத்திகளை தெளிவுபடுத்துக.**

● ஒப்பீட்டு அடிப்படையில் விளக்கிச் செல்லுதல்
● திருக்குறள் போன்றவற்றிலிருந்து மேற்கோள் காட்டுதல்
● பாரதியாரின் கருத்துக்களை மேற்கோள் காட்டுதல்
● தர்க்க ரீதியான மொழிநடை
● கேள்விகளை எழுப்பி, வாசகரை சிந்திக்கத் தூண்டி கட்டுரையை நகர்த்துல்
● குடும்பம், தொழிலகம், சமுதாயம், உலகம் என்ற படிநிலை களினூடாக தம் கருத்துக்களை வரன்முறையாகக் கூறுதல்
● எளிய சொல்லாட்சியும் வாசிக்கத் தூண்டுகின்ற ஆற்றொழுக்கான நடையும்.

# 09. எலியம்

01. எலியம் சிறுகதையை எழுதியவர் யார்? இவர் எங்கு, எப்போது பிறந்தார்?
- உமா வரதராஜன்
- கிலக்கிழங்கையின் பாண்டிருப்பு, 1956

02. உமா வரதராஜனின் எழுத்துக்கள் எவ்வடிவங்களுக்குள் அடங்குகின்றன? இதில் இவரது ஆளுமையின் உச்சமாக வெளிப்படும் வடிவம் எது?
- சிறுகதை, இலக்கிய விமர்சனம், திடைப்பட விமர்சனம், பத்தி எழுத்து, கவிதை, நாவல் போன்ற வடிவங்களுக்குள்
- சிறுகதை

03. உமா வரதராஜனின் சிறுகதைகள் எவ்வெவ் மொழிகளில் பெயர்க்கப் பட்டுள்ளன?
- ஜேர்மன், சிங்களம், ஆங்கிலம்

04. உமா வரதராஜனின் விருதுபெற்ற சிறுகதைத் தொகுப்பு எது? எவ்விருது பெற்றது?
- உள்மன யாத்திரை
- வடகிழக்கு மாகாண சபையின் விருது

05. எலிகள் எவற்றின் குறியீடுகளாக கருதப்படுகின்றன?
- சுரண்டல் முறையின் குறியீடுகளாக.

06. கார்ட்டூன் எலியாகக் கருதப்படுவது எது? அதன் வெளிப்பாடுகள் யாவை?
- மிக்கி மவுஸ்
- நகைச்சுவை உணர்வும் புத்திசாலித்தனமும்

07. எலியம் கதையின் மையக் கருத்து என்ன?
- எலிகளை ஒழிப்பதற்கான ஒருவனின் பிரயத்தனங்கள்

08. எலி எவற்றை வீட்டில் விரும்பிச் சாப்பிடுகின்றன?
- தேங்காய், மாங்காய், அரிசி, பருப்பு, மணச்சவக்காரம்

**09. பிரதான பாத்திரத்திற்குப் பிடிக்காத ஜீவராசிகள் எவை?**

- எலி, பல்லி, கரப்பான் பூச்சி, பூரான், நத்தை, தேரை

**10. கதையின் பிரதான பாத்திரம் ஓர் இசைப்பிரியர் என்பதற்கு எடுத்துக் காட்டுக்கள் தருக.**

- லதா மங்கேஸ்கரின் மீரா பஜனையின் கேட்டல், எம்.எஸ். சுப்பு லெச்சுமியின் மீராபஜனைக்கும் இதற்குமுள்ள வித்தியாசத்தை தீவிரமாக யோசித்தல்

**11. எலி பற்றி பிரதான பாத்திரத்தின் அம்மாவின் கருத்து யாது?**

- எலி பிள்ளையாரின் வாகனம்
- எலியைத் துன்புறுத்துவது தெய்வ நிந்தனை

**12. பள்ளிப் பருவத்தில் பிரதான பாத்திரத்திற்கு எலி பிடித்துக் கொடுத்தவர் யார்? அப்போது அவர் என்ன நினைத்திருக்கக்கூடும்?**

- பிரதான பாத்திரத்தின் மாமா
- பிரதான பாத்திரம், எதிர்காலத்தில் ஒரு பெரிய வைத்திய கலாநிதி யாக ஆஸ்பத்திரி விறாந்தையில் உலா வருவது போலவும், பின்னால் ஸ்டெதஸ்கோப் ஏந்தியபடி தான் வருவது போலவும்

**13. பிரதான பாத்திரம் எலியை மாபெரும் எதிரியாக பிரகடனம் செய்வதற்கு பிரதான காரணமாக அமைந்த சம்பவத்தை சுருக்கமாகக் குறிப்பிடுக.**

- இசைபற்றிய ஆராய்ச்சியில் ஒருநாள் அவன் தீவிரமாக யோசித்துக் கொண்டிருந்தபோது கட்டிலில் விழுந்த எலி அவனது கால் வழியாக கடக்க முற்பட்டமையும் இதனால் அவன் கட்டிலில் துள்ளிக் குதித்து கட்டில் உடைந்ததோடு அவன் முழங்காலில் சிறு காயம் ஏற்பட்டமையும்.

**14. பாட்டி எலியைக் கொல்ல கையாளும் தந்திரம் யாது?**

- எலிப்பொறி வைத்திருத்தல், தேங்காய்த் துண்டை நறுக்கி எடுத்து, நெருப்பில் சுட்டு, பொறியில் பொருத்துதல்

**15. ''பாட்டியின் உத்தியை அவன் கையாளவில்லை'' இத்தொடரினை விளக்குக.**

- பாட்டி எலிப்பொறியில் தேங்காய்த் துண்டு வைப்பாள். ஆனால்

அவன் அதற்குப் பதிலாக நெத்திலிக் கருவாட்டை பயன்படுத்தினான் என்பதை இத்தொடர் குறிக்கிறது.

16. **“எலிகள் எல்லாம் சைவத்தை தழுவி விட்டனவா என எண்ணி அவன் எரிச்சலடைந்தான்” அவனின் எரிச்சலுக்கான காரணம் யாது?**
- எலிகள் எவையும் பொறியில் அவன் வைத்த நெத்திலிக் கருவாட்டை சாப்பிடாமையும், எறும்புகள் கருவாட்டை மொய்த்தமையும்

17. **எலிகள் சம்பந்தமாக அவன் நண்பர்களிடம் பேச விரும்பாமைக்கான காரணம் என்ன?**
- அப்பாவி உயிர்கள் என்று கூறி அவர்கள் எலிகளுக்காக வக்காலத்து வாங்கக்கூடும் அல்லது ஜீவகாருண்ய சங்கத் தலைவர் யாருக்காவது இந்த விசயத்தை இவர்கள் தெரியப்படுத்த முனையலாம் என்ற நினைப்பில்.

18. **“அன்றிரவு எதிர்பாராத இரு சம்பவங்கள் நடந்தன” இத்தொடர் குறிக்கும் அவ்விரு சம்பவங்களும் யாவை?**
- பின்னிரவில் கொஞ்சம் மழை பெய்தமை
- எலியொன்று தன்னிஷ்டத்திற்கு நேரம் எடுத்து கதைசொல்லியின் நேசத்திற்குரிய சட்டையொன்றை குதறியிருந்தமை

19. **எலிப்பொறி மீது அவன் நம்பிக்கை இழந்ததிற்காக காரணம் என்ன?**
- பொறி வைத்த இடத்தில் இருக்க அதில் வைத்த கருவாடு மட்டும் காணாமல் போனமை.

20. **எலித்தொல்லை குறித்து பிரதான பாத்திரம் ஆலோசனை கேட்க நாடியவர் யார்? அவர் கூறிய ஆலோசனைகள் என்ன?**
- பக்கத்து வீட்டு லோரன்ஸ்
- எலிப்பாஷணம் கலந்து வைத்தல், பூனை வளர்த்தல்

21. **லோரன்ஸின் திறமைகளைப் பட்டியலிடுக.**
- கோழிகளை அமுக்குவதில் திறமைசாலி
- பொந்துக்குள் புகுந்த உடும்பை பிடிப்பதில் கெட்டிக்காரர்
- சிறந்த வேட்டைக்காரர்
- மிருகங்களைப் பிடிக்க சிறந்த ஆலோசனை வழங்குபவர்

22. **கூலிக்காரர்களின் தந்திரம் என்ன?**

- பற்றையைத் துப்புரவு செய்யும்போது மண்ணுக்குள் வேர்களை விட்டுவைத்தால் தங்களுக்கு மறுபடியும் வேலைகிடைக்கும் என்ற எண்ணித்தில் அவற்றை விட்டுவைத்தல்

23. **எலியைக் கட்டுப்படுத்த பிரதான பாத்திரம் மேற்கொண்ட தந்திரங்கள் யாவை?**

- எலிப்பொறி வைத்தமை
- எலிப்பாஷணம் வைத்தமை
- பூனை வளர்த்தமை
- பாழ்வளவைத் துப்புரவு செய்தமை

24. **எலிப்பாஷணம் வைத்த கதைசொல்லியின் எதிர்பார்ப்புகள் ஏமாற்ற மடைந்தவாற்றையும், அவன் அடைந்த துயரையும் விளக்குக.**

- எலிப்பாஷணம் வைத்த பாத்திரத்தைச் சுற்றி எலிகள் செத்துக் கிடக்கும் என்ற நம்பிக்கை ஏமாற்றத்தில் முடிந்தது.
- - வீடு முழுக்க துர்நாற்றம் வீசியது. அலுமாரிக்குப் பின்னால் இறந்த கிடந்த எலியின் உடலில் புழுக்கள் நெளிய அவற்றைச சுத்தப்படுத்தியமை.
  - இறந்த எலிகளின் உடல்களைத் தேடவேண்டிய நிர்ப்பந்தம் அவனுக்கு ஏற்பட்டமை
  - செத்துப்போன எலிகளை மீட்பது கடினமான வயிற்றைப் புரட்டும் வேலையாக அமைந்தமை
  - பத்திரிகை இடுக்கில், பழைய சப்பாத்துக்குள், மோட்டுவளைக்குள இருந்த எலிகளை நல்லடக்கம் செய்யவேண்டிய நிலை ஏற்பட்டமை
  - எலிப்பாஷணத்தை அவன் தலைமுழுக வேண்டிய நிலை ஏற்பட்டமை.

25. **எலிகளால் கதைசொல்லி அடைந்த இழப்புக்களைப் பட்டியலிடுக.**

- புத்தம்புது மணச்சவர்க்காரத்தை இழந்தமை
- கட்டில் உடைந்தமை
- முழங்காலில் வலி ஏற்பட்டமையும் ரத்தக் கீறல் உண்டானமையும
- நேசத்திற்குரிய சட்டையை எலி கடித்துக் குதறியமை

- எலிகள் இறந்தபோது அவற்றை அகற்ற வெகு சிரமப்பட்டமை
- கண்ணாடிக் குவளையொன்றை எலி தட்டிவிட்டுச் சென்றமை
- எலியை ஒழிப்பதற்கு வளர்த்த பூனை கறிச்சட்டியை காலிபண்ணும திருட்டுப் பூனையாக இருந்தமை
- கூலியாட்களுக்குப் பணம் கொடுத்து பக்கத்துப் பாழ்வளவை துப்புரவு செய்தமை
- லோரன்ஸிடம் அடிக்கடி ஆலோசனை கேட்பதில் மனவுளைச்சல அடைந்தமை
- எலிகளை அழிப்பதை விட எலிகளிடமிருந்து தன்னைக் காக்கும் பயத்தில் வாழ்கின்றமை

**26. எலிகளை ஒழிக்க மேற்கொள்ளும் முயற்சிகள் பற்றிய விபரிப்பில் இழையோடும் அங்கதத்தினை சுருக்கமாக விளக்குக.**

- எலிகளை அறிமுகப்படுத்தும் போது அதன் திருட்டு முழி பற்றிக் கூறுதல்
- "ஒருவேளை எலிஸாவுக்கு கொண்டு போய் சேர்க்காவிட்டால் முகத்தைத் திருப்பிக் கொள்ளுமோ" (எலியின் மனைவி அல்லது காதலியின் பெயர் எலிஸாவாக இருக்க வேண்டும் என்ற ஊகம்) - எலிக்கு மனைவி, காதலி இருப்பதாகச் சொல்வதும், அதன் சிறு திருட்டை நியாயப்படுத்தலும் அங்கதமாகும்.
- எலிகளுக்கும் அவனுக்குமிடையே யுத்தப்பிரகடனம் ஏற்பட்ட தாகக் கூறுவதும், எலியை தன் மாபெரும் எதிரியாக பிரகடனம் செய்ததும் நயக்கத்தக்க அங்கதங்களாகும்.
- கட்டில் பற்றிய சித்திரிப்பில் அங்கதம் வெளிப்படல் (அவன் இவ்விதம் துள்ளிக் குதிப்பான் என முன்னரே தெரிந்திருந்தால இன்னமும் பலமான மரத்தைக் கட்டில் செய்த தச்சன் இவனுக்காகத தேர்ந்தெடுத்திருக்கக் கூடும்),
- இறந்த எலியினுடைய வாடைகூட 'ரத்தத்தின் ரத்தங்களுக்கு' வீசக்கூடாது என்பதில் கவனமாக இருந்தான் - இத்தொடரில் மற்ற எலிகளை 'ரத்தத்தின் ரத்தம்' (உறவினர்) என்பது அங்கதமாகும்.
- "பொறி கருவாட்டுத் துண்டுடன் நாணேற்றப்பட்டது", "கர்ணனுக்குக் கிடைத்த நாகாஸ்திரத்தை ஒத்த இந்த எலிப்பொறி" என்பவற்றில் அங்கதம் இழையோடல்
- பொறி வைக்கப்பட்ட இரவில் தன்னை அரசனாக நினைத்து அவன

படுக்கைக்குப் போதல் அங்கதம் நிறைந்ததாகும்.

- எலிப்பொறியில் இருந்த கருவாட்டை எலிகள் உண்ணாததை அறிந்து எலிகள் எல்லாம் சைவத்தை தழுவிவிட்டனவா என அவன் எண்ணுவது அங்கதமாகும்.
- நேசத்திற்குரிய சட்டையை எலி குதறியமை குறித்துச் சொல்லும் போது வரைபடத்தில் இருக்கும் அவுஸ்திரேலியாக் கண்டத்தை ஞாபகப்படுத்தும் ஒரு கிழிசல் சட்டைப்பை இருந்த இடத்தில் தோன்றியதாகச் சொல்கின்றமை
- பொறியில் இருந்த கருவாடு காணாமல் போனபோது எலிகளின் "தோலிருக்கச் சுளை முழுங்கும்" சாகஸ வேலை பற்றி அவன் யோசிக்கின்றமை.
- அலுவலக நண்பர்களை "விபரமறியாத பேர்வழிகள் ஒரு காலத்தில ஆர்க்கிமீடிஸைக் கூட அப்படித்தான் பார்த்திருப்பார்கள்" எனல்
- இரண்டு வாரம் சவரம் செய்யாத முகத்துடன் எலிப்பாஷணம் வாங்க கடைக்குச் சென்றமை பற்றியும், எலிக்குத்தானே என்ற கடைக்காரனின் கேள்வியில் இருந்த அபத்தம் பற்றியும் கூறுவது அங்கதமாகும்.
- லோரன்ஸ் பற்றிய கதைசொல்லியின் கருத்துக்கள் யாவும் அங்கதம் வாய்ந்தவையாக சித்திரிக்கப்படல்
  - வேட்டை அனுபவம் பற்றி அவர் சொல்லல்
  - மரை இறைச்சி கொண்டு வருவதாகச் சொல்லும் அவரின் காலதாமதம்
  - தான் சொல்வதைக் கவனிக்கிறாரா? கோழியின் பித்தப்பையை அகற்றுவதில் கண்ணுங்கருத்துமாக இருக்கிறாரா என நினைத்தல்
  - லோரன்ஸிடம் இனிப்போனால் நாய் வளர்க்கும் ஆலோசனையை சமர்ப்பிப்பார் எனல்
- கூலியாட்களின் சொல்லையும், சாமர்த்தியமான செயலையும் அங்கதமாகக் குறிப்பிடல்

**27. "முதலில் செய்யவேண்டிய காரியத்தை கடைசியில் செய்திருக்கிறோம்" என்று கூறப்பட்டது ஏன்? விளக்குக.**

- கதைசொல்லியின் வீட்டுக்குப் பின்னால் இருக்கும் பாழ்வளவே எலிகள் பெருகும் இடமாக இருந்தது. அதனை முதலில் துப்புரவு செய்திருந்தால் எலிகளை ஒழிக்கும் இந்தளவிற்கான பிரயத்தனங்

களை கதைசொல்லி மேற்கொண்டிருக்கத் தேவையில்லை. இதனால் ஏற்பட்ட செலவும் மன உளைச்சல்களும் குறைந்திருக்கும். எந்தவொரு பிரச்சினைக்கும் அடிப்படையான காரணத்தை ஆராய வேண்டும்; பின்னர் அதனைத் தீர்ப்பது சுலபமாகிவிடும். என்பதை இக்கூற்று உணர்த்தி நிற்கிறது.

**28. கதையில் கையாளப்பட்ட மொழிநடை பற்றிய உமது கருத்துக்கள் யாவை?**

- எளிமையான இலகுநடை
- அங்கதமும், நகைச்சுவையும் மிகுந்த நடை
- தத்துவார்த்த நடை
- விளக்கமாக உரைக்கும் நடை
- உணர்ச்சி வெளிப்பாட்டு நடை
- அனுபவ வெளிப்பாட்டு நடை

**29. கதைசொல்லி, லோரன்ஸ் ஆகியோரின் பாத்திர வார்ப்பு பற்றிக் கருத்துரைக்குக.**

- கதைசொல்லி :
  - ஒரு காலத்தில் குடும்பமாக வாழ்ந்து தற்போது வேலையின நிமித்தம் தனியாக வாழ்பவன்
  - எலி முதலான ஜீவராசிகளைப் பிடிக்காதவன்
  - இசை ஆர்வம் மிக்கவன்
  - எலிகளை ஒழிப்பதற்காக பல்வேறு பிரயத்தனங்களை மேற்கொள்பவன்
  - எந்த முயற்சியாக இருந்தாலும் அதில் முழு ஈடுபாடுடையவன்
  - மற்றவர்களின் ஆலோசனையை நாடுபவன்
  - மற்றவர்களின் அனுபவங்கள் வெற்றியளிக்காத நிலையில் சுயமாக முடிவெடுப்பவன்
  - அங்கதமும் நகைச்சுவையும் நிறைந்த பேச்சும் எண்ணங்களுமுடையவன்
  - இறுதியில் யதார்த்தத்தைப் புரிந்து கொண்டு செயற்படுபவன்
- லோரன்ஸ் :
  - ஒரு வேட்டைக்காரர்
  - தன் வேட்டை அனுபவங்களை பிறர் அலுக்கும

படி சொல்ல வல்லவர்
- மரை இறைச்சி தருவதாகக்கூறி கதை சொல்லியை இரு வருடங்களாக ஏமாற்றிக் கொண்டிருப்பவர்
- எலிகளைக் கொல்ல கதைசொல்லிக்கு வித விதமான ஆலோசனைகளை வழங்குபவர்

30. **இக்கதைகூறும் படிப்பினைகள் யாவை?**

- எந்தவொரு பிரச்சினையையும் தீர்க்க அதனுடைய அடிப்படைக் காரணத்தை ஆராய வேண்டும்.
- பொருத்தமற்ற ஆலோசனைகள் முடிவில் துன்பத்தையே தரும்.
- நாம் வாழும் சூழலை எப்போதும் சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.

31. **எலியம் என்ற தலைப்பு இக்கதைக்கு பொருந்துமாற்றை விளக்குக.**

- எலிகள் பற்றிய பல்வேறு கற்பிதங்களையும், எலிகளை ஒழிக்கும் பல்வேறு பிரயத்தனங்களையும் மையப்படுத்தியே இக்கதை நகர்வதால் எலியம் என்ற தலைப்பு மிகப் பொருத்தமாகிறது.
- எலி + அம் = எலியம் என்பது ஒர் ஆக்கப் பெயராகும். இலக்கண வழக்கில் இச்சொல் இடம்பெறாவிடினும் எலிகள் பற்றிய இக் கதைக்கு கதாசிரியர் நகைச்சுவையாகவும், கற்பனைத் திறனோடும் சிருஷ்டித்து இட்டிருக்கும் இத்தலைப்பு பொருத்தமானதாகும்.

32. **"நம்பவில்லையா? நம்பமாட்டீர்கள் இரண்டு எலிகள் ஒரே ராத்திரியில் முடித்து விட்டேன்" இக்கூற்று யாரால் யாருக்கு எச்சந்தர்ப்பத்தில் கூறபபட்டது?**

- கதைசொல்லியால்
- அலுவலக நண்பர்களுக்கு
- கதைசொல்லி இரண்டு எலிகளை கொன்றதாக சொன்னதை நம்பாத சந்தர்ப்பத்தில்

33. **"இன்றைக்கு இராவைக்குப் பாருங்கள் முசுப்பாத்தியை" இக்கூற்று யாரால் யாருக்கு எச்சந்தர்ப்பத்தில் கூறபபட்டது?**

- லோரன்ஸால்
- கதைசொல்லிக்கு
- கோப்பை உணவுடன் எலிப்பாஷணத்தை கலக்கும்போது உடனிருந்த லோரன்ஸால் கூறப்பட்டது.

34. ''ஒரு சுலபமான வழி இருக்கிறது பூனை வளர்த்தால் எலி கிட்டேயும் வராது'' இக்கூற்று யாரால் யாருக்கு எச்சந்தர்ப்பத்தில் கூறபபட்டது?

- லோரன்ஸால்
- கதைசொல்லிக்கு
- லோரன்ஸின் வீட்டுக்குச் சென்றபோது கோழியின் பித்தப்பையை அகற்றிக் கொண்டிருந்த லோரன்ஸ் கதைசொல்லியின் நிலையறிந்து கூறியது.

35. ''கர்ணனுக்கு கிடைத்த நாகஸ்திரத்தை ஒத்த எலிப்பொறி'' இக்கூற்று உணர்த்துவது யாது?

- எலிகளை தவறாமல் கொல்லும் எலிப்பொறியின் சிறப்பு கூறப்படு கிறது. கர்ணனின் நாகஸ்திரம் இலக்குத் தவறாமல் எதிரிகளைக் கொல்லும் அதையொத்த எலிப்பொறி (உவமை அணி) என்பதாகும்.

36. ''மறுபடியும் பொறி கருவாட்டுத் துண்டு வைத்து நாணேற்றப்பட்டது'' இக்கூற்றின் மூலம் விளங்குவது யாது?

- எலிகளைக் கொல்வதற்கான கதைசொல்லியின் பிரயத்தனம் கூறப்படுகிறது. பொறியை நாணாகவும் கருவாட்டை அம்பாகவும உருவகித்து கூறும் விதம் நயக்கத்தக்கது.

# 10. நலம் புனைந்து உரைத்தல்

01. திருவள்ளுவர் எக்காலத்தைச் சேர்ந்தவர்? இவரின் சமயம் பற்றி நிலவும் கருத்து யாது?
- *சங்கமருவிய காலத்தைச் சேர்ந்தவர்*
- *இவர் எந்த சமயத்தையும் சாராதவர்*

02. திருவள்ளுவரின் புலமையை புகழ்ந்து கூறும் நூல் எது? அந்நூலில் எத்தனை புலவர்கள் வள்ளுவரின் புலமையை புகழ்ந்து பாடியுள்ளார்கள்?
- *திருவள்ளுவமாலை*
- *53 புலவர்கள்*

03. ''யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல், வள்ளுவனைப் போல், இளங்கோவைப் போல் பூமிதனில் யாங்கணும் பிறந்ததில்லை'' இப்பாடல் வரிகளைப் பாடியவர் யார்?
- *மகாகவி பாரதியார்*

04. நலம் புனைந்து உரைத்தல் திருக்குறளின் எப்பாலில் இடம் பெற்றுள்ளது?
- *காமத்துப்பால்*

05. நலம் புனைந்து உரைத்தல் அதிகாரத்தின் பிரதான பாடுபொருள் யாது?
- *தலைவன் தன் தலைவியின் பேரழகை புகழ்ந்து உரைத்தல்*

06. பின்வரும் குறட்பாக்களை கொண்டு கூட்டி மீண்டும் எழுதுக.

01. நன்னீரை வாழி அனிச்சமே நின்னினும்
மென்னீரள் யாம்வீழ் பவள்
- *அனிச்சமே வாழி நன்னீரை யாம் வீழ்பவள்*
  *நின்னிலும் மென்னீரள்*

02. மலர்காணின் மையாத்தி நெஞ்சே இவள்கண்
பலர்காணும் பூவொக்கும் என்று

● நெஞ்சே இவள்கண் பலர் காணும் பூ ஒக்கும்
என்று மலர் காணின் மையாத்தி

03. **முறிமேனி முத்தம் முறுவல் வெறிநாற்றம்
வேல்உண்கண் வேய்த்தோ ளவட்கு**

● வேய்த்தோளவட்கு மேனி முறி முறுவல் முத்தம்
நாற்றம் வெறி உண்கண்

04. **காணின் குவளை கவிழ்ந்து நிலன்நோக்கும்
மாண்இழை கண்ஒவ்வோம் என்று**

● குவளை காணின் மாண் இழை கண் ஒவ்வேம்
என்று கவிழ்ந்து நிலன்நோக்கும்

05. **மதியும் மடந்தை முகனும் அறியா
பதியின் கலங்கிய மீன்**

● மீன் மதியும் மடந்தை முகனும்
அறியா பதியின் கலங்கிய

06. **அறுவாய் நிறைந்த அவிர்மதிக்குப் போல
மறு உண்டோ மாதர் முகத்து**

● அறுவாய் நிறைந்த அவிர் மதிக்குப் போல
மாதர் முகத்து மறு உண்டோ

07. **மாதர் முகம் போல ஒளிவிட வல்லையேல்
காதலை வாழி மதி**

● மதி வாழி மாதர் முகம்போல்
ஒளிவிட வல்லையேல் காதலை

08. **மலர்அன்ன கண்ணாள் முகம் ஒத்தி யாயின்
பலர்காணத் தோன்றல் மதி**

● மதி மலர்அன்ன கண்ணாள் முகம்
ஒத்தியாயின் பலர் காணத்தோன்றல்

07. பெண்ணின் நலனை புனைந்துரைக்க வள்ளுவர் எவற்றையெல்லாம் விளிக்கிறார்?

- அனிச்சம் பூ, நெஞ்சு, சந்திரன்

08. தலைவியின் பாதங்களை நெருஞ்சி முட்கள் போல உறுத்துவன எவை என வள்ளுவர் கூறியுள்ளார்?

- அனிச்சம் பூ, அன்னப் பறவையின் சிறகு

09. இவ்வதிகாரத்தில் கையாளப்பட்டுள்ள உவமை அணிகளை குறிப்பிடுக.

- பூ ஒக்கும் கண்கள் கொண்டவள்
- மூங்கிலைப் போன்ற தோள்களையுடையவள்
- மலர் போன்ற கண்ணையுடையவள்
- நெருஞ்சி முள்போல பாதங்களை வருத்துதல்

10. இவ்வதிகாரத்தில் கையாளப்பட்டுள்ள உருவக அணிகளை குறிப்பிடுக.

- உடலின் நிறம் தளிரேதான்
- பல் முத்தேதான்
- இயல்பான மணம் நறுமணமேதான்
- கண் வேலேதான்

11. இவ்வதிகாரத்தில் கையாளப்பட்டுள்ள உயர்வு நவிற்சி அணிகளை குறிப்பிடுக.

- 'நன்னீரை வாழி அனிச்சமே....' என்ற குறளில் பெண்ணின் அழகு உயர்வு நவிற்சியாகக் கூறப்பட்டுள்ளது. அனிச்சம் பூ மென்மை யானது எனினும் எம்மால் விரும்பப்பட்டவள் உன்னை விட மென்மையாளவள் என்பதினூடாக அப்பெண்ணின் மென்மை (அழகு) உயர்வு நவிற்சியாக கூறப்பட்டுள்ளது.
- 'மலர்காணின்மையாத்தி....' என்ற குறளில் பெண்ணின் கண்ணழகு உயர்வு நவிற்சியாகக் கூறப்பட்டுள்ளது. இக்குறளில் "நெஞ்சே! இவள் கண்கள் தாமரை முதலிய மலர்களைப் போன்றிருக்கின்றன என்று மயங்கிவிட்டாய். இவள் கண்ணுக்கு அவை ஒப்பாக மாட்டா" என்று கண்களின் அழகு உயர்வு நவிற்சி அணியாகக் கூறப்பட்டுள்ளது.
- 'காணின் குவளை கவிழ்ந்து ....' என்ற குறளிலும் பெண்ணின்

கண்ணழகு உயர்வு நவிற்சியாகக் கூறப்பட்டுள்ளது. குவளை மலர்கள் காணும் இயல்பைப் பெறுமானால் இவளது கண்களுக்கு நாம் ஒப்பாக மாட்டோம் என்று எண்ணி தலைகுனிந்து நிலத்தைப் பார்க்கும் என்று கண்ணின் அழகு உயர்த்திக் கூறப்பட்டுள்ளது.

- 'மதியும் மடந்தை ....' என்ற குறளிலும் பெண்ணின் முக அழகு உயர்வு நவிற்சியாகக் கூறப்பட்டுள்ளது. நட்சத்திரங்கள் சந்திரனுக்கும் இவளது முகத்திற்கும் வேறுபாடு அறியாமல் கலங்கித் திரியும் என்பதினூடாக இவள் முகம் சந்திரனை விட அழகு என்று உயர்வு நவிற்சியாக கூறப்பட்டுள்ளது.

- 'அறுவாய் நிறைந்த ....' என்ற குறளிலும் பெண்ணின் முக அழகு உயர்வு நவிற்சியாகக் கூறப்பட்டுள்ளது. சந்திரனுக்கு இருப் பதைப் போல இப்பெண்ணின் முகத்தில் எவ்விதக் கறையும் இல்லை என்று கூறப்படுகின்றது. இதன் மூலம் பெண்ணின் முகம் கறையற்ற அழகுடையது என்று உயர்வு நவிற்சியாக கூறப்படுகிறது.

**12. இக்குறள்களில் இழையோடும் வள்ளுவரின் கற்பனையாற்றலை உதாரணம் தந்து விளக்குக.**

- பெண்ணின் மென்மையை 'நன்னீரை வாழி...' என்ற குறளில் திருவள்ளுவர் வெளிப்படுத்துகிறார். பூக்களில் மென்மையானது அனிச்சம் பூவாகும். ஆனால் என்னால் விரும்பப்படும் தலைவியோ உன்னைக் காட்டிலும் மென்மைத் தன்மையானவள் என்று அவர் கூறுவது சிறந்த கற்பனையாகும். 'அனிச்சமும் அன்னத்தின் அழகும்...' என்று ஆரம்பிக்கும் குறளிலும் இக்கற்பனை இன்னும் சிறப்பாக பயன்படுத்தப்பட்டுள்ளது. அனிச்சம் பூவும் அன்னத்தின சிறகும் மிக மென்மையாயினும் அவை நெருஞ்சி முள்போல இவள் அடிகளை வருத்தும் எனச் சொல்கிறார். தலைவியின் பாதங்கள் மென்மையிலும் மென்மை என்பதை இவர் சொல்லும் பாங்கு கற்பனை நயமிக்கது. மேலும், 'அனிச்சப்பூக்கால்களையாள்...' என்ற குறளில் தலைவி தவறுதலாக தன் மென்மையைக் கருதாமல் அனிச்சம் பூவைக் காம்பு நீக்காமல் சூடிக்கொண்டாள் என்றும் அதனாலே அவள் இடை ஒடிகிறது என்றும் கூறுகிறார். இடுப்பின் முறிவிற்கு நல்ல பறைகள் ஒலிக்க மாட்டா என்று அவளின் மென்மைத் தன்மையை குறிப்பது வள்ளுவரின் அபார கற்பனை யாகும்.

- ‘மலர்காணின் மையாத்தி..’ என்று ஆரம்பிக்கும் குறளில் நெஞ்சை விளித்து வள்ளுவர், “இவள் கண்கள் தாமரை முதலிய மலர்களைப் போன்றிருக்கின்றன என்று மயங்கி விட்டாய். ஆனால் இவள் கண்ணுக்கு அவை ஒப்பாக மாட்டா” என்கிறார். தலைவியின் கண்ணழகை உயர்த்திச் சொல்ல, மயங்கும் தன் நெஞ்சுக்கு கட்டளையிடுவது போல பாடியிருப்பது கற்பனையின் உச்சமாகும். இதேபோல, ‘காணின் குவளை...’ என்ற குறளில், “குவளை மலர்கள் காணும் இயல்பைப் பெற்றுக் காணுமானால் சிறந்த அணிகலன் களை உடையவளது கண்ணுக்கு நாம் ஒப்பாக மாட்டோம் என்று என்று எண்ணி தலைகுனிந்து நிலத்தைப் பார்க்குமாம்” என்று கூறுவது தலைவியின் கண்ணழகைச் சொல்வதற்கான சிறந்த கற்பனையாகும்.
- பெண்ணின் முக அழகைக் கூறுமிடத்து வள்ளுவரின் கற்பனை யாற்றலைக் காணலாம். ‘மதியும் மடந்தை...’ என்ற குறளில் நட்சத்திரங்கள் சந்திரனுக்கும் இவளின் முகத்துக்கும் வேறுபாடு அறியாமல் கலங்கித் திரிகின்றன என்கிறார். ‘அறுவாய் நிறைந்த...’ என்று ஆரம்பிக்கும் குறளில், சந்திரனிடத்து இருப்பதைப் போல இப்பெண்ணின் முகத்தில் எவ்விதக் கறையும் இல்லையே! என கற்பனையோடு வியக்கிறார். ‘மாதர் முகம் போல...’ என்ற குறளில், நிலவை விளித்து இப்பெண்ணின் முகத்தைப் போல் உன்னால் ஒளிவீச முடியுமானால் நீயும் என் காதலுக்கு உரித்தாவாய் என்று கூறுகிறார். இதன் மூலம் பெண்ணை உயர்த்தியும் நிலவைத் தாழ்த்தியும் கற்பனைப் பாங்கோடு இவர் கூறுவது நயக்கத்தக்கது. ‘மலர் அன்ன கண்ணாள்...’ என்ற குறளில் தலைவியின் அழகின் பெருமையை கூற, சந்திரனை விளித்து, ‘இவளின் முகத்தைப் போன்றிருக்க விரும்புவாயானால் பலரும் காணும்படி தோன்றாதிருப்பாயாக’ என்கிறார். இங்கு மறைந்திருக்கும் தலைவியின் அழகு, படிப்போரிடையே கூட பலவித கற்பனைகள தோன்றச் செய்வதைக் காணலாம்.

**13. பெண்ணின் கண்களுக்கு ஒப்பாகக் கூறப்படும் மலர்கள் யாவை?**

- தாமரை, குவளை, நீலம்

14. ''அறுவாய் நிறைந்த அவிர்மதிக்குப் போல
மறு உண்டோ மாதர் முகத்து''

1) இக்குறளின் பொருளை உமது நடையில் எழுதுக.
2) பெண்ணின் அழகை விபரிக்குமாற்றிலுள்ள சிறப்புக்களை விளக்குக.

- குறைந்த இடமெல்லாம் நிறைவாகத் தோன்றும் ஒளிவீசும் சந்திரனுக்கு இருப்பதைப் போல இப்பெண்ணின் முகத்தில் களங்கம் இல்லையே
- பெண்ணின் முகத்தை சந்திரனுக்கு ஒப்பிடுவர். எனினும் அச்சந்திரனில களங்கமுண்டு. தலைவியின் முகத்தில் எவ்வித களங்கமும் இல்லையென்று கூறுவதினூடாக சந்திரனை மிகைத்து விட்ட அழகென்று வள்ளுவர் கூறுவது சிறப்புக்குரியதாகும்.

15. தலைவியின் மென்மைத் தன்மையை கூற வள்ளுவர் எடுத்துக்காட்டும் குறள்களையும் அவற்றின் பொருளையும் தருக.

- "நன்னீரை வாழி அனிச்சமே நின்னினும்
  மென்னீரள் யாம்வீழ் பவள்"
  அனிச்சமே! நீ மிக மென்மையாக உள்ள பூவாயினும், என்னால் விரும்பப்படும் இவள் உன்னைக் காட்டிலும் மென்மைத் தன்மை உடையவள்.
- "அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தாள் நுசுப்பிற்கு
  நல்ல படாஅ பறை"
  இவள் தன் மென்மையைக் கருதாமல் அனிச்சம் பூவை காம்பு நீக்காமல்சூடிக்கொண்டதால் இடுப்பு ஒடியும். ஆதலால், இடுப்பின முறிவிற்கு நல்ல பறைகள் ஒலிக்க மாட்டா.
- "அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்
  அடிக்கு நெருஞ்சிப் பழம்"
  அனிச்சம் பூவும், அன்னத்தின் சிறகும் மிக மென்மையாயினும் அவை நெருஞ்சி முள்போல இவள் அடிகளை வருத்தும்.

16. தலைவியின் கண்ணின் அழகைக் கூற வள்ளுவர் எடுத்துக்காட்டும் குறள்களையும் அவற்றின் பொருளையும் தருக.

- "மலர்காணின் மையாத்தி நெஞ்சே இவள்கண்
  பலர்காணும் பூவொக்கும் என்று"
  நெஞ்சே! இவள் கண்கள் பலரும் காண்கின்ற தாமரை முதலிய

மலர்களைப் போன்றிருக்கின்றன என்று மயங்கி விட்டாய். இவள் கண்ணுக்கு அவை ஒப்பாக மாட்டா.

- "காணின் குவளை கவிழ்ந்து நிலன்நோக்கும்
மாண்இழை கண்ஒவ்வேம் என்று"
ஆபரணங்களை அணிந்த மாட்சிமை பெற்ற இவளது கண் அழகை குவளை மலர்கள் கண்டால் இவளுடைய கண்ணுக்கு நாம் ஒப்பாக மாட்டோம என்று தலைகுனிந்து கொள்ளும்.

17. **தலைவியின் முக அழகைக் கூற வள்ளுவர் எடுத்துக்காட்டும் குறள் களையும் அவற்றின் பொருளையும் தருக.**

- "மதியும் மடந்தை முகனும் அறியா
பதியின் கலங்கிய மீன்"
வானத்து நட்சத்திரங்கள் சந்திரனுக்கும் இவளுடைய முகத்திற்கும் வேறுபாடு அறியாமல் தம் நிலையில் இருந்து மயங்கித் திரிகின்றன.

- "அறுவாய் நிறைந்த அவிர்மதிக்குப் போல
மறு உண்டோ மாதர் முகத்து"
குறைந்த இடமெல்லாம் நிறைந்து தோன்றும் ஒளிவீசும் சந்திரனுக்கு இருப்பதைப் போல இப்பெண்ணின் முகத்தில் களங்கம் இல்லையே!

- "மாதர் முகம் போல ஒளிவிட வல்லையேல்
காதலை வாழி மதி"
மதியே நீ வாழ்வாயாக. இப்பெண்ணின் முகத்தைப்போல ஒளிவீச உன்னால் முடியுமானால் நீயும் என் காதலுக்கு உரிமை பெறுவாய்.

- "மலர் அன்ன கண்ணாள் முகம் ஒத்தி யாயின்
பலர்காணத் தோன்றல் மதி"
சந்திரனே! மலர் போன்ற கண்ணையுடைய இவளின் முகத்தைப் போன்றிருக்க விரும்புவாயானால் பலரும் காணும்படியாகத் தோன்றாதிருப்பாயாக.

# 11. புதுமைப் பெண்ணாய் மாறிடுவோம்

**01. 'புதுமைப் பெண்ணாய் மாறிடுவோம்' என்ற கவிதையை எழுதியவர் யார்? இவர் எங்கு பிறந்தார்? இவரது காலம் யாது?**

- *குறிஞ்சித் தென்னவன்*
- *நுவரெலிய மாவட்ட நோர்வூட் தென்மதுரைத் தோட்டத்தில்*
- *1934-1998*

**02. குறிஞ்சித் தென்னவன் கவிதைகளின் பொதுவான உள்ளடக்கம் யாது?**

- *தோட்டத் தொழிலாளியான அவரின் வேதனைமிக்க அனுபவங்கள*

**03. குறிஞ்சித் தென்னவன் ஆக்கிய கவிதை தவிர்ந்த பிற இலக்கிய வடிவங்கள் யாவை?**

- *நாடகங்கள், பக்திப் பாடல்கள், குறும்பாக்கள்*

**04. குறிஞ்சித் தென்னவன் கவிதைகளைத் தொகுத்து வெளியிட்டவர் யார்? அத்தொகுப்பின் பெயர் என்ன?**

- *சாரல்நாடன்*
- *தென்னவன் கவிச்சரங்கள்*

**05. குறிஞ்சித் தென்னவனுக்கு கிடைத்த மகுடங்கள் யாவை?**

- *இலக்கிய வித்தகர், கலாபூஷணம்*

**06. புதுமைப் பெண்ணாய் மாறிடுவோம் - என்ற கவிதையின் மையக் கருத்து யாது?**

- *தோட்டத் தொழிலாளிப் பெண்களின் வேதனைகளும் அதிலிருந்து மீளத் துடிக்கும் அவர்களது வேட்கையும்*

**07. மலையகத் தொழிலாளிப் பெண்களின் கடின உழைப்பு இக்கவிதையில வெளிப்படுமாற்றை விளக்குக.**

- *பனி காயும் முன்னர் குளிர்காற்றையும் பொருட்படுத்தாமல் சங்கு ஊத முன்னர் தளிரினை பறிக்கச் செல்லுதல்*
- *விரல்கள் விறைக்க, உடல் குளிரில் நடுங்க தளிர் பறித்தல்*
- *மன வேதனையுடன் கூடிய எண்ணங்களுடன் கொழுந்து பறித்தல்*

- சிக்கவரும் நிரைச்செடிகளை பக்குவமாக விலக்கி கொழுந்து பறித்தல்

**08. இக்கவிதையில் பெண் விடுதலை வேட்கை எடுத்துக்கூறப்படுமாற்றைக் குறிப்பிடுக.**

- சிக்கவைத்திருக்கும் அடிமைத் தளையினை தூக்கியெறியத் துணிவு கொள்ளுதல்
- பெண்களை மூடிய பேரிருளை ஒட்டுதல்
- அடிமைச்சிறையில் வைத்த எத்தர்களின் கொட்டங்களை அடக்கி மலைக்குச் சமமான மனவுறுதி கொண்டு பெண்கள் போரிட முன்வருதல்
- சாதிசமய வேறுபாடு களைந்து, பெண்கள் தாழ்ந்தவர்கள் என்ற தீய போக்கை இல்லாமலாக்கி, உலகத்தில் புதுமாற்றம் படைத்து பெண் விடுதலைக் கீதத்தை பாடிடுதல்
- போலித் தலைமைகளைப் பொசுக்குதல், அவரின் பொய்மைத் திரைகளைக் கிழித்தல்

**09. இக்கவிதையில் கூறப்படும் பெண் உரிமைச் சிந்தனைகளை எடுத்துக் காட்டுக.**

- பெண்கல்வி பேணுதல், பெண்உரிமை பேசுதல், பெண்எண்ணற்கரிய கலைகள் படைத்தல்
- பெண்ணுக்கு தனிநீதி என்று பேசுவதை இல்லாதொழித்தல் (அதாவது பெண்ணுக்கும் சமநீதி)
- நவ மாதர் அறங்கள் படைத்தல்
- பெண்கள் புதுயுகத்தை உருவாக்குதலும் மலையகப் பெண்கள் வாழ்வியலில் உயர்தலும்

**10. இக்கவிதையில் இடம்பெறும் உவமைகளை குறிப்பிடுக.**

- தங்கத் தளிர்
- வெண்டை விரல்கள்
- கெண்டை விழிகள்
- வெட்டிய செடியில் புடைத்தெழும் அரும்பென மேலுறும் எண்ணங்கள்
- குன்று நிகர்த்த மனவுறுதி

11. இக்கவிதையில் இடம்பெறும் உருவகங்களைக் குறிப்பிடுக.

- நெஞ்சமேடை
- துன்பஒலி

12. இக்கவிதை வெளிப்பாட்டு முறையிலுள்ள சிறப்புக்களைக் கூறுக.

- பெண் எதிர்நின்று உரைப்பது போல கவிதை அமைந்திருத்தல்
- அனுவவத்தின் வெளிப்பாடாக அமைந்திருத்தல்
- உணர்வு பூர்வமாக அமைந்திருத்தல்
- புரட்சிகர சிந்தனைகளின் வெளிப்பாடாக இருத்தல் (பெண்விடுதலை, பெண் உரிமைச் சிந்தனைகள்)
- உவமை, உருவக அணிகளின் பயன்பாடு
- எதுகை, மோனைகளுடன் கூடிய சிறந்த ஓசைநயம்

13. ஒத்த பொருள் தருக.

- மேனி - உடல்
- சதிராடுதல் - நாட்டியமாடுதல்
- எத்தர்கள் - கயவர்கள்
- கோதையர் - பெண்கள்
- மேதினி - உலகம்
- பாலித்தல் - காத்தல்
- பாவையர் - பெண்கள்
- தளை - விலங்கு
- நிரை - வரிசை
- கனல் - நெருப்பு
- பனி காய்தல் - பனி விலகுதல்

# வெளிவந்துவிட்டது..

## Islamic Book House இன் புதிய வெளியீடுகள்!

**"தரம் ஒன்று முதல் உயர்தரம் வரைக்கான உசாத்துணை நூல்கள்"**

**இஸ்லாமிக் புக் ஹவுஸின் புத்தகங்கள்..**



நியாயமான விலைகளில் தரமானவைகள்.

முன் எப்போதும் இல்லாத வகையில் பொருத்தமான, கவர்ச்சியான முன் அட்டைகளைத் தாங்கியவைகள்.

அனுபவம்மிக்க, பிரசித்தி பெற்ற தகுதிவாய்ந்த, ஆசிரியர்களால் எழுதப்பட்டவைகள்.

புதிய பாடத்திட்டத்திற்கு (2016-2017) அமைவாக உருவாக்கப்பட்டவைகள்.

தலை நகரை அடுத்து வாழும் மாணவர்களின் மேம்பாடு, நலன் கருதி இலங்கையில் உள்ள அனைத்து இடங்களிலும் இலகுவாகப் பெற்றுக்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன

www.ibh.lk வலைதளத்தின் ஊடாக Online Order மூலம் புத்தகங்களை பெற்றுக்கொள்ள வாய்ப்புக்கள் உருவாக்கப்பட்டுள்ளது.

தபால் மூலமும் (VPP) பெற்றுக்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.



**YOU RING! WE BRING!**
**FREE HOME DELIVERY SERVICE**
City Limits Only / Conditions Apply

Designed by Mulaim Jh

Islamic Book House X
www.ibh.lk






Published & Distributed by:

IBH Publication
Tel: 011 5736098

**ISLAMIC BOOK HOUSE**
(A subsidiary of "Dharul Iman Trust"- Sri Lanka.)
77, Dematagoda, Road, Colombo 09, Sri Lanka.
Tel: 2684851, 2669197, Fax: 0112688102 Web: www.ibh.lk

Printed by: Aspire Pri



PBD
201029191
TAMIL ILAKKI NAYAM G-10
1 Aug 2018
Rs. 175.00

Rs. 175.00